# திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்

மாலை : 8 28-1-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணா மலர் : 25



பம்பாய் திருவள்ளுவர் கலை மன்றத்தினரின் தீந்தமிழ் ஓவியம்!

## பலிபீடம் நோக்கி

சமூக சீர்திருத்த நாடகம்

கதை வசனம்: நெல்லை இளம்வழுதி
பாடல்கள் : சுபகுமார்

●

9—3—55 புதன் அன்று

தாராவி வ. உ. சி. திடலில் நடைபெறும்

பிறவிவரம் அடுத்த அறிக்கையில்


# காங்கிரஸ் அவியல்


நாள்..............


ஆவடி காங்கிரஸ்—பண்டிகைக் கொண்டாட்டங்களுக்குச் சிகரம் அமைத்த மாடலிலே நடைபெற்று முடிந்துவிட்டது! சமாளிக்க முடியாத கூட்டம்! சுருங்கக் கூறவேண்டுமானால், "கும்பமேளா" கூட்டத்தைவிட எண்ணிக்கையில் அதிகமாய் இருந்ததாக வடநாட்டிலிருந்துவந்த காங்கிரஸ்காரர்கள் பேசிக் கொண்டனர்! ஏற்பாடுகளனைத்தும் மிகப் பிரமாதம்! அனைத்திந்திய காங்கிரஸ் சரித்திரத்திலேயே இப்படி ஒரு மாநாடு இதுவரை நடைபெற்றதாக கூறுவதற்கில்லையென்று இந்திய உள்நாட்டிலாகா அமைச்சர் தோழர் பந்த் தமது சகா ஒருவரிடம் கூறி பெருமூச்சு விட்டாராம்!

*

ஆவடி மாநாட்டிலே எத்திக்கு நோக்கினும் நேரு—அடுத்தபடியாக காமராஜ் ஆக இந்த இருவரது பெயர்தான் மாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகள்—பார்வையாளர்களின் உரையாடலிலே முன்னணியில் நின்றது! மற்றொருவரைப்பற்றியும் அவ்வப்போது பேசப்பட்டது. ஆனால் சிலரால் பரிதாபத்துடனும், பலரால் வெறுப்புடனும், அந்தப் பெயர் உச்சரிக்கப்பட்டு வந்தது. அவர்தான் முன்னாள் கவர்னர் ஜெனரலும், பின்னாள் சென்னை முதலமைச்சரும், இந்நாள் புராணக் கதா பிரசங்கியுமான ஆச்சாரியார்.

*

விஷயாலோசனைக் கமிட்டி கூட்டம் ஒரு நாடகத்தைப் போல சுச்சிதமாக நடைபெற்று முடிந்துவிட்டது. தீர்மானங்களைக் குறித்து வெட்டியும் ஒட்டியும் பேச உறுப்பினர்களுக்கு எண்ணமிருந்தது. எனினும் நேரு பண்டிதர் சீறிப்பாய்வாரே என்பதற்காக பேச்சுக்களைச் சுருக்கிக் கொண்டனராம் மாநாட்டுப் பிரதிநிதிகள்!

எனினும் வரவேற்புத் தலைவர் தோழியர் அம்புஜம் அம்மையார் வடநாட்டு ஆதிக்கத்தின் தலையில் குட்டுவதைப்போல பேசினார்! முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வடநாட்டிலேயே பெரிய பெரிய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. தொழில் துறையில் கீழ் நிலையிலிருக்கும் தென்னாடு அறவே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இனியாகிலும் இந்த அவல நிலையைப் போக்க வழிவகை செய்ய வேண்டுமென்று மனவேதனையுடன் தெரிவிக்கிறேன் என்று அந்த அம்மையார் தமது வரவேற்புரையில் அறிவுறுத்திய சமயம் நேரு பண்டிதர் தமது முகத்தைச் சுளித்துக் கொண்டாராம்! வடநாட்டுத் தலைவர்களில் சிலர் காதை பொத்திக்கொண்டனராம்!

*

மாநாட்டிலே திரண்டிருந்த லட்சக்கணக்கான மக்கள், அங்கு ஆற்றப்பட்ட சொற்பொழிவினை கேட்கவில்லையாம். தமிழில்யாராவது பேசினால் உட்கார்ந்து கேட்பதும், இந்தியிலே நேரு பேசினாலும் எழுந்து நடப்பதுமாக யிருந்தனராம் காங்கிரஸ் காரர்கள். இந்த சம்பவம் அடிக்கடி நடைபெறவே காங்கிரஸ் தலைவர் தேபார்—நுணுக்கமாக தெரிவித்துங்கூட வடநாட்டுக் காங்கிரஸ் காரர்கள் வேணுமென்றே இந்தியிலே பேசி சண்டித்தனம் செய்தனராம்.

*

ஆவடி மாநாட்டிலே. காங்கிரஸ் தோழர்களுக்கும், சில கம்யூனிஸ்டுகளுக்கும் கைகலப்பு ஏற்பட்டிருந்ததாம்! நிமிடத்திற்கு 500 இட்லி தயார் என்று தினஇதழ் ஒன்று கேலி செய்து எழுதி வந்ததைக் குறிப்பிட்டுப் பேசி, காங்கிரஸ்காரர்களை அந்த கம்யூனிஸ்டுகள் நையாண்டி செய்தனராம். இதைக் கேட்டிருந்த காங்கிரஸ் தோழர்கள் உங்கள் சமாதான மாநாட்டுக்கு வந்திருந்தவர்கள் வைக்கோலைத் தின்றார்களா—அல்லது உண்ணா விரதம் இருந்தனரா என்று கேட்க, இரு சாராருக்கும் கைகலப்பு ஏற்படும் அளவுக்கு விவகாரம் முத்தி விட்டதாம்! இந்த சமயம் காதொடிந்த ஊசி யொன்று கைகால் மூக்குடனும் ஆனால் மேல்மாடி காலியாகவும் காட்சியளிக்கிறது என்ற செய்தி கேட்டு இந்த இரு சாராரும் அந்தக் காட்சியைக் காண ஓடி விட்டனர். கைகலப்பும் வாயளப்போடு நின்று விட்டதாம்!

●

வடநாட்டுக் கலாச்சாரம், பண்பு, பழக்க வழக்கத்திற்கும் தென்னாட்டு கலாச்சாரம், பண்பு பழக்க வழக்கங்களுக்கும் வேறுபாடு நிறைய உண்டு என தி. மு. கழகம் கூறினால், இதெல்லாம் குறுகிய மனப்பான்மையாளர் கூறும் வெட்டிப் பேச்சு என So-called மேதாவிகள் கூறிவருகிறார்களல்லவா? அந்த பிரகஸ்பதிகள் தெளிவு பெறும் வண்ணம் ஆவடி மாநாட்டில் வடவர்—தென்னவர் வேறுபாடுகள், உணவு அருந்துவதிலிருந்து, ஆடை உடுத்தும் முறை, பழகும் விதம் ஆகிய அனைத்திலும்


11-ம் பக்கம்


## ஆவடியில் அபார கண்டுபிடிப்பு!




காங்கிரஸ் பொதியமரம்போல வளருகிறது. இது பெருமைப்படத் தக்கதல்ல. இதனால் நாட்டுக்கு நன்மை பயக்காது என்பதோடு காங்கிரசுக்கே பேராபத்து ஏற்பட்டுவிடும், எனவே காங்கிரசை சுத்தப்படுத்த வேண்டும் என்று ஆவடியில் நேரு பேசினார்!

# இந்துமகாசபைத் தலைவரின் விசித்திர புத்தி!

தென்னாட்டில், குறிப்பாகத் தமிழகத்தில் இதுவரை மத அடிப்படையில் எவ்விதப் பிரசாரமும் நடந்தது கிடையாது. இந்நிலையிலே வடஇந்தியத் தோழர்கள்—இந்து மகா சபைத் தலைவர்கள்—நமது தமிழகத்தில் புகுந்து மதப்பூசல்களைக் கிளப்ப ஆரம்பித்திருக்கிறார்கள். இந்து முஸ்லீம் பூசல்களின் இருப்பிடம் வடநாடு. அவர்கள் புரிந்த அக்ரமமோ ஏராளம்! அப்பூசலினால் வீடிழந்தோர், மானமிழந்தோர், மனைவி மக்களை இழந்தோர், சொத்து சுகம் இழந்தோர் அநேகம்! போர் மூண்டது காஷ்மீரத்திலே! அங்கே பாரதத்தின் பெருமையை நிலை நாட்டியவர் தென்னாட்டு வீரர்கள்! ஆனால் பட்டமும்; பதக்கமும் ஏராளமாகப் பெற்றது "அறிவு படைத்தவர்கள் ஆங்கிலேயரின் வாரிசு" என மார்புதட்டும் வடநாட்டினர் தான்!

இன்று பாரதம் சிறிதளவு முன்னேறியுள்ளது என்றால் அது பெரும்பான்மை தென்னவரின் மூளை...தென்னாட்டில் அநேக பூசல்கள் இருக்கலாம்! ஆனால் அவைகள் அறிவின் பெயரால் நடப்பவை என்பதை உணர வேண்டும். எதற்காக போர் மூண்டது என்பதைச் சிந்தியாது தென்னவரைக் குறிப்பாகத் திராவிடர்களை "முட்டாள்கள்!" எனக் கூறுவது மதியீனம்! ஆனால் அந்த "முட்டாள்களில்" சிலரின் உதவிகிடைத்ததால்தான்இன்று தில்லியிலே அவர்கள் அறியாசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள் என்பதை மறக்கக்கூடாது!

இந்நிலையிலேதான் இங்கு பறந்து வந்திருக்கின்றனர்; இந்து மகா சபைத் தோழர்கள்! அவர்கள் இந்து மதத்தின் பாதுகாவலர்களாம்! இந்து மதம் ஒன்றுதான் நாட்டை நலமுறச்செய்யுமாம்! நாட்டிலே வாழும் மற்ற மதத்தினரை என்ன செய்வது? அவர்களை யெல்லாம் இந்துக்களாக மாறும்படி கட்டாயம் செய்வதா? அன்றேல் அவர்களை வெட்டிப் படுகுழியில் புதைப்பதா? "நூறுவிதமாகக் கூறினாலும் மதம் ஒன்றேயொன்றுதான்" என்பதை இந்து மகா சபைத் தோழர்கள் மறந்துவிட்டார்கள் போலும்! அம்மகாசபையின் செயலாளர்—இந்து மதப் பாதுகாவலர்—தோழர் தேஷ்பாண்டேயின் மதுரைப்பேச்சு இந்து மதத்தைப் பாதுகாப்பதாக இல்லை; இரத்த வெறி கொண்ட கீழ்த்தரமான பேச்சாகவே காணப்படுகிறது.

**"ஆரியர்களோ, திராவிடர்களோ, வெளி நாட்டிலிருந்து வந்தார்களில்லை. ஆரியர்கள் வெளி நாட்டிலிருந்து வந்தவர்கள் என்று எழுதப்பட்ட சரித்திரம் தவறானதென்று இப்பொழுது தெரிய வருகிறது" என்று அண்மையில் மதுரையில் குறிப்பிட்டார் தோழர். தேஷ்பாண்டே.**

இக்கூற்றை கண்டதும், தோழர். தேஷ்பாண்டே இதுவரை ஏதாவது சரித்திரப் புத்தகங்களைப் படித்ததுண்டா என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது, இந்திய நாட்டின் மக்கள் சபை அங்கத்தினர் அவர். ஒரு மகாசபையின் செயலாளருமாவார். அப்படிப்பட்டவருக்குச் சரித்திரத்தைப்பற்றி தெரியாதெனில் மிகுந்த ஒரு வியப்பாகும். அவர்கள் நாட்டிலே பலர்ஆராய்ந்தோ அல்லது வேற்று புத்தகங்களின் மாற்று அமைப்போ கொண்டு பல சரித்திரப் புத்தகங்கள் வெளியிட்டுள்ளனர். அவைகளையாவது தோழர் தேஷ்பாண்டே படித்துப் பார்க்கவேண்டும் என்பது எனது ஆவல்.

**"மத்திய ஆசியா, ஆஸ்திரியா, ஹங்கேரி போன்ற பல இடங்களிலிருந்து ஆரியர்கள் இமய மலைப்பள்ளத்தாக்கு வழியாக சுமார் நாலாயிரம் ஆண்டுகட்கு முன் இந்தியாவிற்குள் நுழைந்து 'சப்த சிந்து' என்னுமிடத்தில் குடியேறினர்கள்" என்று சரித்திரங்கள் தெள்ளத்தெளிய உரைக்கின்றது. "ஆரியர் இந்திய நாட்டில் தோன்றியவர்" என்று தோழர். தேஷ்பாண்டே வலுவினால் அது முற்றும் தவறு எனக்கூற சான்றுகள் பலஉள.**

"இந்து மதம் தென்னாட்டிலிருந்து வடநாட்டிற்குப் பரவியது" எனக்குறித்தார் அவர். அவ்விதமாயின் வடநாட்டிலே காணும் கலாச்சாரம் தென்னாட்டைச் சார்ந்ததாக, அதாவது நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் கலாச்சாரத்தை ஒத்ததாக இருக்க வேண்டுமே? ஆனால் அங்கு காண்பவைகளோ—காணப்பட்டவைகளோ அதற்கு நேர் எதிரிடை "ஆரியர்கள் நாளடைவில் திராவிடர்களைவிட அறிவு வளர்ச்சி அடைந்து விட்டார்கள்" என்று தேஷ்பாண்டே காரணம் காட்டுவராகில், அது ஒரு ஒவ்வாத விவாதமாகும். எக்காலத்தும் திராவிடர் சிறந்து விளங்கினார்கள் என்பதற்கு சரித்திரம் காட்டும் சான்றுகள் பல உள "சரித்திரம் முழுவதும் பொய்" என்று கூறிய கார்லைல் தேஷ்பாண்டே பின் தாங்கமாட்டார் என உறுதியுண்டு. தென்னவர்களை உயர்த்தி வடவரைக் குறை கூறுவது மட்டுந்தான் சரித்திரத்தில் தேஷ்பாண்டே கண்ட தவறு.

"ஆரியர்கள் வெளி நாட்டினர் அல்லர். அவ்விதம் உரைப்பது சரித்திரத்தவறு அது இப்போது தான் தெரிய வருகிறது" என்ற தேஷ்பாண்டே அதை எவ்வாறு கண்டு பிடித்தார் என்பது ஒரு புரியாத புதிர். அவர் ஆராய்ச்சி மூலம் கண்டு பிடித்தாரா அன்றேல் அந்நிய நாட்டினர் யாரேனும் புதியதொரு தோற்றம் ஒன்றை இவருக்குக் காட்டினரா என்பது ஒரு விளங்காச்செய்தி! ஒரு வேளை 'சப்த சிந்து, உயிர்த்தோற்றம் பெற்று ஆரியர்கள் இந்திய நாட்டின் தவப் புதல்வர்கள்' என்று அவரிடம் கூறியதோ? எல்லாம் விசித்திரம்!...

**"நிறங்களின் மூலம் யார் திராவிடர், யார் ஆரியர் என்று பிரிக்க முடியாது. கருப்பாக இருப்பவர்களெல்லாம் திராவிடர்கள் என்று கூறினால் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா, ஸ்ரீ ராமபிரான் எல்லோரும் நீலமேக வர்ணமுடையவர்களே" என்று குறிப்பிட்டார் தேஷ்பாண்டே.**

நிறங்களின் மூலம் ஆரியர், திராவிடர்களைப் பிரிக்க முடியாதுதான்...ஆனால் எளிதில் வடவர், தென்னவர் என்பதைக் கண்கூடாகக் காணலாம். கிருஷ்ணபரமாத்மாவும் ராமபிரானும் இங்கு சான்றுகளாகின்றனர். இந்துக்களின் கொள்கைப்படி மூடநம்பிக்கைப்படி—அவர்களிருவரும் அவதார புருடர்கள்! ஆண்டவன் உருப்பெற்றவர்கள்! அப்படிப்பட்டவர்களை ஆரியர்கள் சொந்தம் பாராட்டலாமா? இருவரும் நீலமேக வர்ணர்கள்—மகாவிஷ்ணுவின் அவதாரம்!...நீலங் கலந்த கருமை நிறமுடையவர்கள்!..."சிகப்பு நிறமுடையவர்கள் ஆரியர்கள்! கருமை நிறத்தோற்றவர் திராவிடர்கள்!" என்பது தேஷ்பாண்டேயின் கருத்து. கிருஷ்ணனும் ராமனும் நீலமேகவர்ணர்கள்! அதாவது அவர்கள் தனிச்சிவப்போ, தனிக் கருமையோ உடைய நிறத்தோற்றுபவர்களல்லர். அதாவது அவர்கள் ஆரியர்களோ திராவிடர்களோ அல்லர். இருகூட்டரின் பொது இயல்புடையவர்கள் என்பது தெளிவு. ஆகவே ஆரியர்கள் அவர்களைத் தங்களுக்கே உரியவர்கள் என்று கொள்ளல் மிகத்தவறு. அதோடு அவர்களிருவரும் உருவமற்ற கற்பனைத் தோற்றங்கள்! அவர்களை மேற்கோள்களாகக் காட்டுவதும் அறிவீனத்துக்கு எடுத்துக்காட்டாகும்!

"ஸ்ரீராமபிரான் எல்லோராலும் பூஜிக்கத்தக்க குணக்குன்று. எந்த நாட்டு சரித்திரத்திலும் அவர் போன்ற சத்புருஷர்களைப் பார்க்க முடியாது." இதுவும் தோழர் தேஷ்பாண்டேயின் பேச்சில் அடங்கியதுதான். ஒரு நாட்டின் இதிகாசம், புராணம், சரித்திரம் இவற்றிற்குள்ள வேறுபாடு என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை அவரால்! "ராமபிரான் எந்த நூற்றாண்டு பேர்வழி... எங்கெந்தக் காடுகள் அவன் வாழ்வினைக் குறுக்கிட்டன...வாலி, சுக்ரீவன் தொடங்கிய குரங்குகள் எங்கே வாழ்ந்தன... அனுமன் அநாயாசமாகக் கடலைத் தாண்டி இலங்கையினுள் நுழைந்து அதை யெரித்தது"......என்பன போன்ற விஷயங்களை ஆராய்ச்சி செய்து தோழர் தேஷ்பாண்டே சரித்திரப் புத்தகம் வெளியிடப் போகிறாரோ என்று தெரியவில்லை. இவ்விதமான பல கந்தர்கோளங்கள் நிறைந்ததாக இருக்கிறது அவரது பேச்சு.

**"திராவிட இயக்கத்தினர் செய்யும் தவறான பிரசாரம் மக்களை ஏமாற்றுவதுடன் உணர்ச்சிகளையும் பாதிக்கிறது" என்றும் கூறத்தவறவில்லை தேஷ்பாண்டே! சரித்திர ஆதாரமற்ற குப்பைகளை 'உதவாக்கரை' என்று கூறுவது தவறான பிரசாரமா! அன்றேல் தேஷ்பாண்டேயைப் போன்று சரித்திரத்தைப்பற்றி ஒன்றும் தெரியாமல்—புராணக் குப்பைகளை யெல்லாம் சரித்திரம் என்று எண்ணிக் கொண்டு—மக்களிடை வாயில் வந்தவற்றைக் கூறுவது தவறான பிரசாரமா? என்பதைச் சிந்தித்து உணரவேண்டும்.**

மிகவும் ருசிகரமான நிகழ்ச்சியொன்று—அண்மையில் தமிழ்நாடு இந்து மகா சபைத் தோழர் மகாலிங்கம் அய்யர் அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. என் தோழர் ஒருவர் வீட்டில் வந்து அவர் தங்கியிருந்தார். மகாலிங்கய்யர் இந்து மத ஒற்றுமையைப் பற்றி என் தோழர்களின் எண்ணங்களைக் கேட்டார். அவர்களும் தங்களுக்குத் தெரிந்த வழிகள் பல கூறினார்கள். அப்போது ஒருவர் "விபசாரத் தடையை அரசாங்கம் கொணர்ந்து, நடைமுறையிலும் செயலாற்றியதே. அதைப்பற்றி உங்கள் கொள்கை யென்ன? என்று மகாலிங்கய்யரிடம் கேட்டார்.

ஒருவன் தன் வீட்டில் சாப்பிடுகிறான்-தினமும் சாப்பிடுகிறான். ஒரே மாதிரியான சாப்பாடு அவனுக்கு சலிப்பு ஏற்படுகிறது. அது இயற்கை! ஆகவே அவன் வெளியே எங்காவது சாப்பிட விரும்புகின்றான். அதனால் அவனுக்கு வெளியே கட்டாயம் சாப்பிடுவதற்கு ஒரு இடம் வேண்டும். அதைப் போன்று தாசிகள் சமூகத்திற்கு மிகவும் அவசியம், அவர்களை ஒழிக்கக் கூடாது. அவர்கள் சமூகத்திற்கு மிகவும் உதவுகிறார்கள். அவர்கள் கட்டாயம் வேண்டும். அவர்களை ஒழித்தால் நம் நாடு என்றுமே உருப்படாது! என்றார் மகாலிங்கய்யர்.

இதுதான் உங்கள் கொள்கையோ? என்றேன் நான். அவர் ஆம் எனத் தலையசைத்தார். இவ்விதமான கொள்கையுடையவர்கள் இந்து மகா சபையினர்.

இப்பேர்ப்பட்ட முகாமின் தலைவர் அறிவியக்கமாம் திராவிட இயக்கம் ஒழிந்துபடவேண்டும் என்று வரட்டுக் கூச்சல் போடுவதில் ஆச்சரியம் என்ன இருக்கமுடியும்! மதவெறியில் மூழ்கிய ஒரு கும்பலிடம் இதைத் தவிர வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? ஆனால் காலம் இவர்களின் பத்தாம்பசலிப் போக்குக்கு விரைவில் முற்றுப் புள்ளி வைத்தே தீரும்.

—அனிக்கி இராமனுதன்

# அம்மா வாழ்க அக்கா வாழ்க

**பெ**ரியார் அவர்கள் மலேயா நாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு 17-1-55-ம் நாள் சென்னை வந்து சேர்ந்தாரல்லவா? அவரை வரவேற்று உபசரிக்கும் நிகழ்ச்சிகளில் ஒன்ருக அன்று மாலை மாபெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

அந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ள வட ஆற்காட்டிலிருந்தும் பல தோழர்கள் வந்திருந்தனராம். ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் அய்யா வாழ்க என்று கூறியதுமே அவரோடு சென்று வந்த அம்மையாரை நினைவுபடுத்தி "அம்மா வாழ்க" என்று முழக்கமிட்டனராம்—அத் தோழர்கள். இந்த ஒலி முழக்கம் அவ்வூர்வலத்திலே யிருந்த மார்வலிப்பும் மண்டைக் குடைச்சலும் கொண்ட So-Called நோயாளியின் காதில் "அக்கா வாழ்க" என்று கேட்டதாம்!

உடனே அந்தப் பேர்வழி—இரண்டொருவரைக் கூப்பிட்டு, பாருங்கள் இங்கே வந்து 'அக்கா வாழ்க' என்று சத்தம் போடுகிருர்கள். அவர்களைப் போகச் சொல்லுங்கள் என்று முணுமுணுத்தாராம்!

அந்தப் பேர்வழியே—சத்தம் போட்டவர்களிடம் நேரில்கேட்டு தெளிவு பெற்றிருக்கலாமே இதற்காக வேறு இருவரைத் தூண்டுவானேன் என்று கேட்கிறீர்களா? அந்தப் பேர்வழியை ஒரு சமயம் பெரியார் அவர்கள் "உன்னுடைய போக்கையும் பசப்புதலையும் பார்க்கும்போது நீ ஒரு பார்ப்பனுகப் பிறந்திருக்கவேண்டும்" எப்படியோ தமிழனுகபிறந்துஇப்படி என்னிடம் கைவரிசையைக் காட்டி வருகிருயே" என்று கண்டித்துப் பேசியிருக்கிருரென்ருல், அந்தப் பேர்வழியின் தன்மையை மேலும் விவரிக்க வேண்டிய அவசியமில்லையல்லவா! ஆதலாலே தான் வேறு இரண்டு பேரை உசுப்பிவிட்டார்!

அந்த இரு அப்பாவிகளும் அய்யா வாழ்க—அம்மா வாழ்க என்று ஒலிமுழக்கம் செய்தவர்களிடம் சென்று ஏனய்யா அக்கா வாழ்க என்று முழக்க மிடுகிறீர்களாமே என்ற அதட்டல் போட்டனராம்! முழக்கமிட்ட தோழர்கள் அந்த அப்பாவிகளைப் பார்த்து "நீங்கள் கேளாக் காதர்களோ—நாங்கள் அய்யா-அம்மா என்று கூறுவது அக்கா என்று உங்களுக்குக் கேட்கிறதோ" என்று உசாவினராம்!

நாங்களாகக் கேட்கவில்லை. அதோ அந்த மனிதர்தான் சொன்ஞர் என்று காதொடிந்த ஒரு ஊசியைக் காண்பித்தனராம்!

ப்லே ஆட்களய்யா நீங்கள்! மானங் கெட்டதுகளையும் மனிதப் பண்பற்றதுகளையும் மனிதர்கள் வரிசையிலே சேர்ப்பது போல காதொடிந்த ஒருஊசியைக் காண்பித்து "அந்த மனிதர்" சொன்ஞர் என்கிறீர்களே என்றுகேட்டதுடன், வீட்டிலிருக்கும் அக்கா தங்கைகளைப் பற்றி இங்கே பேசுவது—வடிகட்டிய அயோக்கியத்தனமல்லவா என்று கடாவ உடனேஅந்த இரு அப்பாவிகளும் நழுவிவிட்டனராம்!

'அம்மா வாழ்க' என்று பெரியார் ஊர்வலத்திலே கூறியதைக் கேட்டவுடனே அந்தக் காதொடிந்த ஊசி மனிதனுக்கு ஏன் அவ்வளவு வயிற்றுக் கடுப்புத் தெரியுமோ!

1948-ம் ஆண்டு பண்ணுருட்டியிலே இந்தி எதிர்ப்புத் தொண்டர்களைப் பாராட்ட ஒரு பொதுக் கூட்டம் திராவிடர் கழக சார்பில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு பெரியார், பாரதிதாசன், அண்ணு மற்றும் பலர் வந்திருந்தனர், நான் மேலே குறிப்பிட்ட பேர்வழியும் வந்திருந்தார்.

அந்த நாட்கள் — பெரியார் அவர்களும், அண்ணுவும் கழகப் பிரச்னையிலே சற்று அபிப்ராய பேதப்பட்டிருந்த காலமாகும். எனினும் கூட்டம் முடிந்ததும், அண்ணு அவர்கள் பெரியாரிடம் சென்று, யான் வந்த காருக்கு பெட்ரோல் ஆகிவிட்டது; 3 காலனுக்குக் கூபன் கொடுங்கள் என்ருர்! என் காருக்கே பெட்ரோல் இல்லாமல் தவிக்கிறேன் என்னை வந்து பெட்ரோல் கொடு என்று தொல்லை கொடுக்க மட்டும் வந்துவிட்டீர்களே என்று சற்றுசத்தம் போட்டு பேசினுர் பெரியார். அண்ணு அதைவிட சற்று உரத்த குரலில் நான் அடுத்த ஊருக்கு போக வேண்டுமே, பெட்ரோல் இல்லாமல் என்ன செய்வது என்ருர்.

பெரியார் என்னைப் பார்த்து நடராசன், கூபன் நம்மிடம்லலை போலிருக்கிறதே என்ருர். பெட்டியில் இருக்கிறதாக ஞாபகம் என்றேன். இதற்குள் மணி அம்மையார் கூபனையே கொண்டு வந்து கொடுத்தார்கள்.

உடனே, பெரியார் நாளைக்கு அப்படி என்ன விசேஷம் எதற்காக அந்த ஊருக்குப் போகிறீர்கள் என்று அண்ணு அவர்களைக் கேட்டார்.

காலையிலே ஒரு திருமணக் கூட்டத்தில் பேசிவிட்டு அன்றிரவு நடைபெறும் ஒரு நாடகத்திற்குத் தலைமை வகிக்கப் போகிறேன் என்ருர் அண்ணு.

நாடகத்திற்கு அவ்வளவு அவசரம். அதற்கு நான் கூபன் கொடுக்கணும் இல்லையா என்று கூறிக் கொண்டே அண்ணுவிடத்தில் பெட்ரோல் கூபனைக் கொடுத்தார்.

சிறிது நேரங்கழித்து நான் மேலே குறிப்பிட்ட அந்தக் காதொடிந்த ஊசிப் பேர்வழி மணி அம்மையாரிடம் சென்று ஸ்டேஷன்வரை போக சற்று பெரியார் 'வானை' அனுப்பி வையுங்கள் என்று கேட்டார். அதற்கு அந்த அம்மையார் இங்கிருந்து பண்ருட்டி ஸ்டேஷன் 6 பர்லாங் தொலைவுதானே யிருக்கும், அதற்கு ஒரு காரா? அதெல்லாம் அனுப்ப முடியாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள். தொலைவிலிருந்து இதை கவனித்துக் கொண்டிருந்த யான் உடனே பெரியார் கார் ஓட்டும் தோழரான ஆறுமுகமிடம் சென்று ஸ்டேஷன் வரை அவரைக் கொண்டுபோய் விட்டு வாருங்கள் என்றேன். அந்தப் பேர்வழி காரில் ஏறிக்கொண்டு சொன்ஞர், —'நடராசன் நீங்கள் பெரியாருடன் இருக்கும் வாய்ப்பினைப் போல யான் பெற்றிருந்தால் இந்த மணியை என்றே விரட்டியிருப்பேன்' இருக்கட்டும் ஒருகை பார்க்கிறேன் என்று முணுமுணுத்துக் கொண்டே காரில் ஏறிச் சென்ருர்,

பெரியாருடன் அபிப்பிராயப் பேதப் பட்டிருந்த அண்ணுவுக்கு பெட்ரோல் கூப்பன், அதுவும் அதிகாரமுடன் கிடைக்க--இந்தப் பேர்வழிக்கோ — முக்கால் மைல் தொலைவுக்குக் கூட கார் அனுப்ப முடியாது என்று மணியம்மையார் தெரிவித்த எரிச்சல் இன்னும் அவரின் உடம்பிலே ஊறிக் கொண்டிருக்கிறதாம்! அதனுல் தான் அடிக்கடி நோயால் பீடிக்கப்பட்டு அவஸ்தையுறுவதாகவும் கூறப்படுகிறது.

இது எப்படியோ தொலையட்டும். அன்றுமுதல் இந்த காதொடிந்த ஊசிப் பேர்வழிக்கு—மணி அம்மையார்மீது கோபமாம்! இதற்குள்ளாக திருமண நிகழ்ச்சியும் வந்தது. உடனே இந்த மனிதர் குதித்த குதி யிருக்கிறதே சொல்லி முடியாது. பழம் நழுவி பாலில் விழுந்து அதுவும் நழுவி வாயில் விழுந்ததைப் போல குதித்தார்! படை திரட்டினுர்! விடுதலை அலுவலகத்தையே ஒரு கலக்கு கலக்கிவிட்டார்! ஒதுங்கியிருந்த அண்ணுவுக்கு தூது அனுப்பினுர், வேண்டினுர். இந்த நாய்க்கரின் பூர்ஷ்வா மனப்பான்மையை ஒழித்துக்கட்ட இதைவிட வேறு நல்ல சந்தர்ப்பம் கிடைக்குமா? நேற்று வந்தவளுக்கு இவ்வளவு கும்மாளமா" என்று ஒருமையிலே பேசி ஆவேசத்திலாழ்ந்தார். அண்ணு அமைதி கூறியும் இந்த மனிதர் கேட்டாரில்லை.

இப்படி கரடியாய் கத்திய மனிதர் கடைசி நேரத்தில் மாதச் சம்பளம் 150 ஆயிற்றே ஏறத் தாழ சட்டசபை உறுப்பினர் பெறும் ஊதியமல்லவா? என்பதை எண்ணி யெண்ணிப் பார்த்து—தன்னையும் மீறிய ஒரு சக்தி தலையில் குட்டவே, குட்டிக் கரணம் அடித்தார். பெரியாரிடம் அபார அன்பும், மணி அம்மையாரிடம் அதைவிட பிரமாதமான பக்தியும் இருப்பதைப் போலக் காட்டிக் கொண்டிருக்கிருர்!

எனவேதான் இத்தனை சம்பவங்களுக்கிடையேயும் மணி அம்மையாரை எப்படியாவது மட்டந் தட்டவேண்டும் என்ற எண்ணம் அந்த காதொடிந்த ஊசிப் பேர்வழிக்கு மனதிலே ஊசலாடிக் கொண்டிருந்தது.

அதற்கு தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தார் அம் மனிதர். 17-1-55 அன்று நடைபெற்ற பெரியார் வரவேற்பு ஊர்வலத்திலே அய்யா வாழ்க என்பதோடு அம்மாவும் வாழ்க என்று தி. க. தோழர்கள் முழக்கமிட்டதைத் தடுத்து நிறுத்தி தனது வயிற்றெறிச்சலை ஓரளவாவது தீர்த்துக் கொள்ளலாம் என்று என்ணியே அக்கா வாழ்க என்று ஊர்வலத்தில் சொல்லுவதா என்று அங்கலாய்த்தார். இரண்டொருவரை ஏவினுர்! இறுதியில் முக்காடிட்டு ஊர்வலத்திலே கலந்து விட்டார்!. பரிதாபம்!

—நக்கீரன்

## மணமகள் தேவை

நற்குடும்பத்தில் பிறந்த நல்ல அலுவலில் உள்ள 33-வயது வாலிபருக்கு படித்த மணமகள் தேவை. ஜாதி மத பேதங்கள் கவனிக்கப்படமாட்டாது.

விவரத்திற்கு கீழ்காணும் முகவரிக்கு எழுதுக. செ. த.

c/o ஆசிரியர் திராவிடன்
நியேன்ஸ் ரைஸ்மில்ரோடு, சென்னை 1

### மரகதமணி தோற்றம்

கம்பம் உத்தமபுரம் வடக்கு வட்டாரத் தி. மு. கிளைக் கழகத்தின் துணைச் செயலாளர் எம். பொன்னையா அவர்களின் துணைவியாருக்கு 3-1-55 இரவு 3 மணிக்கு பெண்மகவு பிறந்தது. குழந்தைக்கு மரகதமணி எனப் பெயரிடப் பட்டது. இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூ. 1—0—0 நன்கொடை அளிக்கப்பட்டது. [வரப்பெற்ருேம். நன்றி. நிர்வாகி.]

### அழகிரி தோற்றம்

கரியாபட்டணம் தி. மு. கழகச் செ[illegible]லாளர் இரா. சங்கரன் அவர்களின் துணைவியாருக்கு 16-12-54 அன்று ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு அழகிரி எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று அளிக்கப்பட்டது. [வரப்பெற்ருேம், நன்றி. நிர்வாகி]

### ஊமத்துரை வேண்டுகோள்

சென்னை தி. மு. கழக ஊழியனுன யான் கழகக் கூட்டங்களில் சொற்பொழிவாற்ற விரும்புகிறேன். தி. மு. கழக நிர்வாகிகள் என்னை ஊக்குவிக்கும் வகையில் வாய்ப்பினைத் தர வேண்டுகிறேன். சில்லை ஊமத்துரை

184, கோவிந்தப்ப நாயக்கன் தெரு
சென்னை 1.

## ஏஜெண்டு தோழர்களுக்கு

வணக்கம். ஜனவரி மாதம் முடிய பட்டியல் அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கேற்ப தொகையைத் தவறாது உடன் அனுப்பி வைக்குமாறு நினைவூட்டுகிறோம்.

நிர்வாகி—'திராவிடன்'

---

திராவிடன்

சென்னை : 28—1—55 : வெள்ளி

# புதிய பல்லவி!

அனைத்திந்திய காங்கிரசின் 60-வது மாநாடு ஆவடியிலே நடந்தேறி முடிவுற்ற விவரங்களைத் தேசியத் தினஇதழ்கள் அவ்வப்போது வெளியிட்டு வந்துள்ளன. இம்மாநாடு நடைபெற்ற விதம், ஏற்பாடுகள், மற்ற நிகழ்ச்சிகள், ஆகியவைகளைப் பற்றி நாம் அபிப்பிராயம் கூறவிரும்பவில்லை—எனினும் ஆவடி மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானத்தைப் பற்றியும் காணப்பட்ட சில சம்பவங்களைக் குறித்தும் நமது கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பனிரெண்டு லட்ச ரூபாய்களுக்கு மேலாக செலவு செய்து, இந்திய தேசிய காங்கிரசின் சரித்திரத்திலேயே இதுவரை காணப்பெறாத பெருமை மிக்க அளவுக்கு ஆவடி மாநாட்டினை நடத்தியிருப்பினுங்கூட அங்கு நேரு பண்டிதராலும் மற்ற வடநாட்டு காங்கிரஸ் தலைவர்களாலும் பேசப்பட்ட பேச்சினை ஆராய்ந்தால் திராவிடத்திலே மக்கள் சக்தியாக இயங்கிவரும் திராவிட இயக்கத்தையும் அதனின் உயர்ந்த கொள்கையான நாட்டுப் பிரிவினையையும் கண்டித்துப் பேசுவதற்கே இம்மாநாடு வடவர்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

நேரு பண்டிதர், நாளுக்கொரு நாடாக (வெளி நாடுகளிலே) பவனி வந்து தமது கித்தாப்பைக் காட்டிக் கொள்ள தமது அபார மூளையைப் பயன்படுத்தி வருகிறார்! எனினும் இந்தியத் துணைக் கண்டத்திலே குறிப்பாக தென்னாட்டில் வளர்ந்துவரும் மக்கள் சக்தியினை அவர்களின் உயிர்ப் பிரச்னையை இந்த வெளிவேஷங்களின் சாமர்த்தியத்தால் மறைத்துவிடவோ அல்லது அப்பிரச்னையை மறந்துவிட்டு வாழவோ அவரால் முடியாதென்பதை ஆவடி மாநாடு திட்டவட்டமாக நேரு பண்டிதருக்கும் அவரது சர்க்காருக்கும் அறிவுறுத்தியிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ன சாதித்து விட்டது என்று குதர்க்கம் பேசித் திரியும் கும்பல், ஆவடி மாநாட்டில் வரவேற்புத் தலைவரான அம்புஜம் அம்மையாரின் சொற்பொழிவினை அறிவுக் கண்கொண்டு பார்ப்பார்களேயானால், தி. மு. கழகத்தின் கொள்கையினை வடவர்களுக்கு எடுத்துக் கூறும் தூதுவர் போலவே அம்புஜம் அம்மையாரின் பேச்சு அமைந்திருப்பதைக் காணலாம்.

> "முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், பெரும் தொழிற்சாலைகள் அனைத்தும் வடநாட்டிலேயே அமைக்கப்பட்டுள்ளன. தொழில் துறையில் கீழ் நிலையிலிருக்கும் தென்னாடு அறவே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை வேதனையோடு கூறிக் கொள்கிறேன். இனியாகிலும் இவ்வித ஏற்றத் தாழ்வுகள் நடைபெறாவண்ணம் இந்திய சர்க்கார் ஆவன செய்யவேண்டும்".

என்பதாக வரவேற்புரையில் நினைவூட்டப்பட்டிருக்கின்றது. பழுத்த தேசிய வாதியும், அனைத்திந்திய காங்கிரசின் வரவேற்புத் தலைவருமான அம்புஜம் அம்மையாரே இவ்வாறு—அதிலும் பகிரங்க மாநாட்டிலே இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு திக்குகளிலிருந்தும் வந்து குவிந்த ஜனத்திரளிடையே மனம் குமுறி பேசியிருக்கிறார்களென்றால் வடநாட்டு ஆதிக்கத்தின் ஏகாதிபத்திய தன்மையும் சுரண்டலிஸ மனப்பான்மையும் எத்தன்மையது என்பதை தென்னாட்டின் பொதுப் பணியில் இயங்கியுள்ள அனைவருமே எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

சுதந்திரம் கிடைத்து எட்டு ஆண்டுகளாகியும் நாட்டிலே வறுமை ஒழியவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்தபாடில்லை. நிர்வாகத்துறையிலாவது நாணயமான முறையைக் காண முடிகிறதாயெனில் சர்வம் ஊழல் மயம் என்ற பட்டியலை தேசிய ஏடுகளே வெளியிட்டாக வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு ஊழல்கள் மலிந்து விட்டன. இன்னும் சொல்லப்போனால் அந்நிய ஆதிக்கப் பிடிப்பில் நம் நாடு சிக்கியிருந்த காலத்திலாவது அன்றைய ஆட்சியாளர் சிறிது மனிதாபிமானமாகிலும் காட்டி வந்தனர். ஆனால் இன்றோ—தேசபக்தி—ஏக இந்தியா என்ற அர்த்தமற்ற கூப்பாட்டினை எழுப்பிக் கொண்டு நம் திராவிடத்தின் எஞ்சியுள்ள வாழ்வையும் பாதிக்கப்பட்டு வருகிறது.

இந்த அநீதிக்கு முற்றுப்புள்ளி வைக்காத வரையில் ஆவடி காங்கிரசைப் போல ஆயிரத்தெட்டு காங்கிரசை திராவிடத்திலே கூட்டினாலும் மக்களின் ஏழ்மையையும் வறுமையையும் ஒழித்துவிட முடியாது. வேண்டுமானால் காங்கிரசைச் சிறப்பாக நடத்திக் காண்பித்தவர்களுக்கு நேரு பண்டிதரின் சபாஷ் பட்டமும் இந்திய ஜனாதிபதியின் விபூஷணப்பட்டமும் கிடைக்கலாமேயன்றி திராவிட நாட்டிலுள்ள தேசியத் தோழர்கள் உள்ளிட்ட மக்கள் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து நிற்க முடியாது.

எனவே தான் தி. மு. கழகம், தனது அடிப்படைக் கொள்கையான நாட்டுப்பிரிவினையை மேலும் வலியுறுத்திப் பணியாற்றி வருகிறது. ஆகவேதான் இக்கொள்கைக்கு மக்களின் ஆதரவு பெருகிவருவதைக்காணும் வடநாட்டவர்கள் ஆவடி காங்கிரஸ்போல ஒரு விழாவை நடத்தி அதிலே புதிய பல்லவியும் பாடத்தொடங்கியுள்ளனர்!

அந்தப் பல்லவிதான் **சோஷலிஸம் போன்ற பொருளாதார சீரமைப்பை** நடைமுறையில் கொண்டுவருவது என்ற தீர்மானமாகும்.

இந்தத் தீர்மானத்தின் வாசகத்திலிருந்தே காங்கிரஸ் மேலிடத்தாரின் மனப்பான்மையும் அவர்கள் உள்ளபடியே செயலில் இறங்குவார்களாயென்பதையும் நாம்விளக்கத் தேவையில்லையென்று கருதுகிறோம்.

கம்யூனிஸ்டுகளைப்பற்றி — அண்மையில் நேரு பண்டிதர் குறிப்பிட்டுப் பேசுகையில் "ஒரு கையில் ஒலிபெருக்கியும், மற்றொரு கையில் கத்தியும் மறைத்து வைத்திருக்கும் கோஷ்டியினர்" என்று சித்தரித்தார்! ஆனால் நேரு பண்டிதரும் அவரது சர்க்காரும் ஒரு கையில் "சோஷலிஸம் போன்ற பொருளாதாரத் திட்டத்தையும் மற்றொரு கையில் முதலாளித்துவத்தின் பாதத்தைத் தடவிக் கொடுக்கும் வித்தையிலும் இறங்கி யிருக்கிறது.

எனவே ஆவடி காங்கிரசின் மகா முக்கிய தீர்மானம் என்று தப்பட்டமடிக்கும் சோஷலிஸம் போன்ற பொருளாதாரச் சீரமைப்புத் தீர்மானம் என்பது வளர்ந்துவரும் மக்கள்சக்தியினை ஏமாற்ற முனையும் ஏகாதிபத்திய திருவிளையாடல்களில் ஒன்றாகும்.

ஐந்தாண்டுத் திட்டம் என்ற பல்லவியைக் கேட்டுக் கேட்டுச் சலிப்பும் வேதனையும் அடைந்துள்ள திராவிட நாட்டு மக்களை மேலும் ஏமாற்றித் தங்கள் நாட்டினை இன்னும் வளம்பெறச் செய்ய டெல்லி ஏகாதிபத்தியம் தயாரித்துள்ள புதிய பல்லவிதான் **சோஷலிஸம் போன்ற பொருளாதார அமைப்புத்** தீர்மானமும். இந்த பல்லவியைத்தான் ஆவடி காங்கிரசில் அதுவும் அபார செலவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

எனவே ஆவடி காங்கிரசில் உருவாக்கப்பட்ட தீர்மானங்களும், பேசப்பட்ட பேச்சுக்களும் வெறும் வாய்ப்பந்தலேயன்றி செயல் முறையில் வடநாட்டு ஆதிக்கம் நம் திராவிடத்தை மேலும் மேலும் சுரண்டிக் கொழுப்பதற்கு சென்னைமாநில சர்க்கார் எப்போதும் போல பராக் கொடுத்து வருவதில் எவ்வித மாற்றமும் இருக்கப் போவதில்லை.

## தோழர் பெரியசாமி மறைவு

விருதுநகர் நகராட்சி மன்றத் தலைவரும், திராவிட மக்களின் மதிப்பிற்குரிய தோழரும் துணைவருமான தோழர் எம்.எஸ். பெரியசாமி (நாடார்) அவர்கள் இத்திங்கள் 21-ந் தேதி விருதையில் இயற்கை யெய்தியதைக் கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். செந்திக்குமார் கல்லூரியை அமைக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சியும், ஆற்றிய அரும்பணியும் என்றும் மறக்க முடியாததாகும். அவரது மறைவினால் வருந்தும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

---

## நடக்க இருப்பவை

**அரியலூர்**

திராவிட இளைஞர் மன்ற சார்பில் 31-1-55 திங்கள் மாலை 6-மணிக்கு ஆயிரக்கால் மண்டபத்தின்முன் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் கோ. சிவப்பெருமாள் தலைமையில் தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், அன்பில் தர்மலிங்கம், கு. தங்கவேலு, தமிழ்முத்து ஆகியோர் பேசுவர்.

**பரமக்குடி**

தி. மு. கழக முதலாண்டு விழா 27—1—55 இரவு 8-மணிக்கு பழம்நீ திடலில் நடைபெறும். பறப்பை எம். இலக்குவனார் தலைமையில் தோழர்கள் என். வி நடராசன், ஆர். எஸ். பிரகாசம், எஸ். ஜீவதாசன், பெரியனேந்தல் நாகலிங்கம் பேசுவர்.

**குளக்காட்டுப்புதூர்**

சேலம் வேலூரை அடுத்த குளக்காட்டுப்புதூர் தி. மு. கழக சார்பில் 29—1—55 மாலை மாபெரும் கூட்டம் தோழர் சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறும். தோழர் என். வி. நடராசன் மற்றும் பலர் பேசுவர்.

**முன்னணிக் கழகம்**

திருவல்லிக்கேணி சுப்பராயச் செட்டித் தெரு 9-ம் எண் இல்லத்தில் 29—1—55 மாலை 5-15 மணிக்கு புலவர் நன்னன் தலைமையில் தோழியர் கனகசுந்தரி எம்.ஏ., அவர்கள் 'எதிர்கால இலக்கியம்' என்னும் பொருள்பற்றி பேசுவார்.

---

**முகவரி மாற்றம்**

மீ. சு. இளமுருகு பொற்செல்வி
முதலியார் தெரு, கடம்பர் கோயில்
குழித்தலை

---

## வாசகர்களுக்கு

தோழர்கள், தங்கவேலர், திராவிடம் பித்தன் ஆகியோருக்கு உடல் நலம் சரியில்லாமையால் இவ்வாரமும் சுமைதாங்கி—ஆரம்பக் கல்வி திட்டம் ஆகிய தொடர்ச்சிகள் வெளியிட இயல்வில்லை. அடுத்த வாரத்திலிருந்து தொடர்ந்து வெளிவரும்.

நிர்வாகி—'திராவிடன்'

# தொழிற்சங்கத் துறையில் தி. மு. க.

## பஞ்சாலைத் தொழிலாளரிடையே விழிப்புணர்ச்சி

உலகத்திலேயே முக்கியத்துவம் வாய்ந்ததும், முதன்மை வாய்ந்ததும், அவசியமானதும் சுதந்திரமாகும், சுதந்திரம் வந்துவிட்டால் சோறு வந்துவிடுமா? என்று கேவல மொழி கூறுபவரும் உண்டு. சுதந்திரத்தின் அடிப்படையிலேதான் அந்நாட்டின் வளமும்—வாழ்வும் முன்னேற்றமும் அமைந்திருக்கிறது என்பது நல்லோர் அனைவரும் அறிவர். ஆறெழுத்திலான சுதந்திரம் என்பது ஒரு வார்த்தை மட்டுமல்ல இந்த வார்த்தையில் பொதிந்திருக்கும் அந்த நிலை ஏற்பட, உலகிலே உள்ள ஒவ்வொரு நாடும் ஆயிரக் கணக்கான மனித உயிர்களை எண்ணற்ற மாவீரர்களை செல்வங்களை அழித்து, அயராது பாடுபட்டு, வெற்றி பெற்றிருக்கும் செய்தியினை வரலாற்று ஏடுகள் நமக்கு விளக்கமாக எடுத்துக் காட்டுகிறது. அந்த மக்கள் தம் நாடு, தம் மொழி இவைகளை உயிராகக் கொண்டு வாழ்ந்துவரும் நிலைதனை அறிந்த நாம், நம்நாடு, நம்மொழி வாழ நாம் பாடுபடுவதில் என்ன தவறு? எனினும் ஆணவ மொழி பேசிடுவோர்—அலட்சிய சிரிப்பு சிரித்திடுவோரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

உதாரணமாக இந்தியத் துணைக்கண்டம் விடுதலையடையுமுன் 'இதோ நமது எதிரி — வெள்ளையனே வெளியே போ'' என்ற ஒரே சொல்லின் அடிப்படையிலேதான் போராடியது—சுதந்திரமும் பெற்றது இதை யாரும் மறுக்க முடியாது. வெள்ளையன் வெளியேறினால் சோறு கிடைக்குமா? அந்நிய துணியை எரித்தால் சோறு கிடைக்குமா? உப்புச் சத்தியாகிரகம் செய்தால் சோறு கிடைக்குமா? என எவரும் கேட்கவில்லை அப்போது. ஆனால் இப்போது மட்டும் அந்த வார்த்தைகள் தமிழகத்தில் கேட்கப்படுகிறது. காரணம் என்ன? என்றைய தினம் திராவிடநாடு—வடநாட்டு தொடர்புகளிலிருந்து விடுபட்டு விடுமோ என ஆதிக்க வெறியர்களும், அதன் பாதந்தாங்கிகளும் பயப்படுகின்றனர். எனவே தான் இத்தகைய கேள்விகள் கேட்கப்படுகிறது.

எனவே ஏசி பேசினாலும், நம்மை தாக்கினாலும் நாம் கவலைப் படாது தொடர்ந்து இலட்சியத்தினைக் கூறி நம்நாடு விடுதலை அடைய அயராது பாடுபட்டு வருகிறோம். முதலாளி—தொழிலாளி என்றோ, ஆண்டான்—அடிமை என்றோ, நகர சுத்தித் தொழிலாளி—பஞ்சாலைத் தொழிலாளி என்றோ, ரயில்வே தொழிலாளி—விவசாயத் தொழிலாளி என்றோ பிரித்துப் பார்க்காமல் நம்முடைய மூலக் கொள்கையான 'திராவிட நாடு திராவிடருக்கே! என்ற இலட்சியத்தைக் கூறி வருகிறோம், ஒரு நாட்டிலே ஒரு அரசியல் கட்சி இருக்கிறதென்றால், அந்த நாடு விடுதலையடைந்து அந்த நாட்டிலுள்ள அந்நிய மூலதனத்தை அழித்து, நிலத் திமிங்கிலங்களை ஒழித்து, முதலாளி—தொழிலாளி என்ற பாகுபாடு இல்லாத சமதாம நாடாக்குவதுதான் அதன் முதற்பணியாக இருக்க வேண்டும். அதற்கு இன்றைய சர்க்கார் ஆற்றல் பெற்றிருக்கவில்லை யென்பது மட்டுமல்லாமல் கட்சி சார்பற்ற முறையில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் ஒரே மூச்சாக இருந்து பணியாற்ற வேண்டிய தொழிற் சங்கத்தை பல்வேறு கருத்துடைய அரசியல் கட்சியினர், தொழிலாளர்களின் சக்தியைச் சிதறடிக்கும் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர். கருத்து மாறுபட்டு இருக்கும் காரணத்தால், ஒத்துழையாமையும் அடிதடி கொலைகளும் நடைபெறுவதை நாம் பார்க்கிறோம். உதாரணமாக சமீபத்தில் நடந்த செய்தியே இதற்குச் சான்றாகும். அரசாங்கம் நியமித்த முக்கூட்டுக் கமிட்டியின் முடிவுகளை அமுலாக்கும் பொருட்டு அரசாங்கத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் முறையில் டிசம்பர் 21ந் தேதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் நடைபெற்றது. அந்த வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது. எனினும், ஒரு அரசியல் கட்சியின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள தொழிற் சங்கம் கலந்து கொள்ளவில்லை. இதனால் தொழிலாளர்களிடையே ஒற்றுமையின்மையும் கருத்துப் பூசலும் ஏற்படுகிறது. இதற்குக் காரணம் யார்?

சோவியத் ரஷ்யாவிலே ஒரு தொழிற் சங்கம் இருக்கிறதென அங்கு சென்று வந்தவர்கள் கூறுகின்றனர். நவசீனாவிலும் அப்படியே என்கின்றனர். ஆனால் இந்த நாட்டில் மட்டும் பல தொழிற் சங்கங்கள் அமையக் காரணமென்ன? அப்படித்தான் அந்த தொழிற் சங்கங்கள் தன் நாட்டுப் பற்று மொழிப்பற்று கொண்டு இயங்குகிறதா என்றால் அதுவுமில்லை. நம் தாயகத்தின் விடுதலை உணர்ச்சியை அடக்கி என்றென்றும் இந்த நாட்டை வேட்டைக் காடாக்கிக் கொள்ள நினைக்கும் வடநாட்டு ஆதிக்கபுரியினருக்குச் சாதகமாக இந்த தொழிற் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதன் இடையே வஞ்சக வலையை விரிப்பதிலே கைதேர்ந்த சில அரசியல் கட்சிக்காரர்கள், தங்களுடைய பித்தலாட்டப் பேச்சினை சிண்டு முடியும் வேலைதனை தொழிலாளர் மத்தியிலே செய்து வருகின்றனர்.

தொழிலாளர்களுக்கு நன்மை செய்யும் கட்சி, சோறுபோடும் கட்சி எங்களுடைய கம்யூனிஸ்ட் கட்சிதான்! திராவிடர் இயக்கமோ ரயிலை நிறுத்துவதும் இந்தியை ஒழிப்பதும்தான்! அவர்கள் வகுப்பு வாதிகள்—குறுகிய நோக்கம் உள்ளவர்கள் என்றெல்லாம் வாய்கிழிய தப்பட்டமடித்து வருகிறார்கள். இதன் எதிரொலிதான் இன்று நாட்டிலே ''திராவிட விவசாயச் சங்கம்'' ''தென்பகுதி ரயில்வே மென் யூனியன்'' ஏற்படக் காரணமாக இருந்தன. திட்டிய மரத்திலே பதம் பார்க்கும் நண்பர்கள் சூடுபட்ட பூனையென இதோடுமட்டும் விட்டார்களா? பஞ்சாலைத் தொழிலாளர் மத்தியிலேயும் தங்களுடைய கோயபல்ஸ் பிரசாரத்தை கூற ஆரம்பித்தார்கள். இதன் விளைவு இன்று திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர்களிடையே புதியதோர் விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தனது நாடு திராவிடம் வாழ, தேனினும் இனிய தம் மொழி வாழ நாட்டு மக்கள் வாழ, தமக்கென பொதுவான சிறப்புப் பண்பு கொண்ட ஒரு தொழிற்சங்கம் தேவைஎன்பதை உணர்ந்துவிட்டனர் திராவிடத் தொழிலாளர்கள். அதற்கென தீவிர பணியாற்றவும் உறுதி பூண்டு செயலில் இறங்கிவிட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகமும் அறிஞர் அண்ணா அவர்களும் இதற்கான வழிவகைகளைக் கூறினால் திராவிட பஞ்சாலைத் தொழிலாளா கழகம் அமைக்கப்பெற்று இந்தியத் துணைக்கண்டத்தில் மட்டுமல்ல, உலகிலேயே திராவிடம் தொழில் துறையில் ஆட்சிமுறையில் தலைசிறந்த நாடாக இயங்கச் செய்வோம்.

—இரா. சுந்தரம், கோவை.

---

## கைத்தறி ஆடையை அணியுங்கள்

**அன்று:**—பிரிட்டிஷ் ஏகாதிபத்தியச் சுரண்டலை ஒழிக்க கதரை உடுத்தினோம்.

**இன்று:**—வடநாட்டு ஆதிக்கச் சுரண்டலைத் தடுக்க கைத்தறி ஆடையை அணிவோமாக.

---




**தோழர். லால்பகதூர் சாஸ்திரி.**

டெல்லி

இந்திய சர்க்காரின் போக்கு வரத்து இலாக்கா அமைச்சரே வணக்கம். ஆவடி காங்கிரசுக்கு வந்த தாங்கள், 18-1-55-ம் நாளன்று இராமேஸ்வரத்திற்கும் தனுஷ்கோடிக்கும் சென்றீர்களாம், தாங்கள் சென்றது அங்கிருந்த மக்களைப் பார்த்து மனக்குறையை அறிய அல்லவென்பது அங்குள்ளவர்களுக்கு எப்படித் தெரிய முடியும்! தங்களின் (18-1-55-ந் தேதி வரை குவிந்து கிடந்த) பாப மூட்டையை அந்தப்புண்ணிய தீர்த்தத்திலே கரைத்து விமோசனம் பெறவே முக்கியமாகச் சென்றீர்கள்.

எப்படியோ அப்பகுதியிலுள்ள மக்கள் தங்களைத் தேடிப் பிடித்து — அவர்களின் மனக் குமுறலைத் தெரிவித்திருக்கிறார்கள். தனுஷ்கோடி கரையும் அதனையடுத்த ஊரும் (ஸ்டேஷன் உள்பட) கடல் அரிப்புக்கு இலக்காகி வரவர சிதைவுற்று வருகிறதென்றும், விரைவில் அதைக் கவனிக்காவிடில், ஊருக்கே ஆபத்து என்றும். ஆகவே அதனைச் சீர்படுத்த பலமுள்ள கரை அமைக்க வேண்டுமென்றும் மகஜர் மூலம் வேண்டுகோள் விடுத்தனராம்.

இந்த வேண்டுகோளுக்குத் தாங்கள் கூறிய பதிலைக்கண்டு எனக்குச் சிரிப்பாய் வந்தது. தென்னாட்டின் உயிர்ப்பிரச்னையெல்லாம் உங்களைப் போன்றவர்களுக்கு எவ்வளவு சாமான்யமாகவும் கோமாளிப் பேச்சுக்களுக்கு பயன்படுத்தப்படுகிறது என்பதை நினைக்குந்தோறும் மனிதாபிமானமுள்ளவர்களுக்கு மனவேதனை ஏற்படத்தானே செய்யும்.

> ''தனுஷ்கோடிக்கரை கடல் தண்ணீரால் அரிக்கப்படுகிறதென்றால் அந்த ஸ்டேஷனையே மூடிவிட்டு, இன்னும் 10 மைல் முன்னதாக வந்து விட்டால் தீர்ந்தது. அப்படிச் செய்யவே நான் நினைக்கிறேன்''

என்று பதில் கூறியிருக்கிறீர்கள். இதிலிருந்து தென்னாட்டு பிரச்னைகளைப்பற்றி வடநாட்டு ஆதிக்க பீடம் எந்த அளவுக்கு அக்கரை காட்டி வருகிறதென்பது விளங்கவில்லையா?

வடநாட்டிலே கோடிக் கணக்கான பணங்களைச் செலவிட்டு பாலைவனப் பகுதிகளுக்கெல்லாம் உயிரூட்டப்பட்டு வருகிறது. வடநாட்டு ஆதிக்க ஆட்சியிலே தென்னாடு தேய்ந்து வருவது போதாதென்று மணல் போட்டு அடியோடு மூடவும் திட்டமிடுகிறீர்கள். வெள்ளை ஏகாதிபத்தியத்திற்குக் கூட இவ்வளவு ஆதிக்க வெறியும் வஞ்சனையும் இருந்திருக்க முடியாது.

இவ்வளவிற்கும் உம்மைக் குறை சொல்லி பயனில்லை. வடநாடு தென்னாடு என்று பேசுவது குறுகிய நோக்கம் தேசத் துரோகமென்று வரட்டுக் கூச்சல் போட்டுக் கொண்டு உங்களின் ஆதிக்க சவாரிக்குக் குனிந்து கொடுத்துக் கொண்டு வருகிறார்களே திராவிடத்திலுள்ள எங்கள் தேசியத் தோழர்கள், அவர்களின் குருட்டு தேச பக்தியைக் கண்டுதான் பரிதாபப்பட வேண்டியிருக்கிறது.

எனினும்—லால்பகதூர் சாஸ்திரியாரே வடநாட்டு ஆதிக்கச் சுரண்டல் தன்மைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும். என்பதை மட்டும் தாங்கள் மனதில் கொள்ள வேண்டுகிறேன்.

—கூத்தரசன்

சிறுகதை

# கள்வனின் காதலி

R. S. சம்பந்தம்

## 1.

(ஆங்கிலக் கவிஞன் ஆல்ஃபிரெட் னோயிஸ் (Alfred Noyes) தீட்டியிருக்கும் 'ஹைவேமேன்' (Highwayman) என்ற இன்சுவைக் காவியத்தின் தழுவிய இச்சிறுகதை)

*

இல்லாதவன் நெஞ்சத்தைப் போல நிலவை இழந்த வானம் ஒளியிழந்து கிடந்தது. இழுத்துப் போர்த்திய இருட் போர்வையினுள்ளே உலகம் தன் உடலை ஒளித்துக் கொண்டிருக்கும் நள்ளிரவு நேரம்.

ஊருக்குச் சற்றுப் பக்கத்தில் அமைந்துள்ள அந்த விடுதியில் அமைதி அரசோச்சிக் கொண்டிருந்தது. உதட்டிலே மதுக் கோப்பை முத்தமிட, மயக்கு மொழியும் மந்தகாசப் பார்வையும் கொண்ட மங்கையர் மடியிலே தவழ குடித்துக் கூத்தாட வரும் செல்வர்களுக்கும், வழிப்பயணத்தில் தங்கிச் செல்ல வருபவர்களுக்கும் இடங் கொடுத்து பகலெல்லாம் இன்பப் பூஞ்சோலையாக விளங்கிய அந்த விடுதி மனித நடமாட்டமில்லாத மயான பூமியைப்போல சலனமற்றுக் கிடந்தது. உழைத்துக் களைத்த சிப்பந்திகளும் உண்டு களைத்த செல்வர்களும் உறக்கத்தின் இன்ப அணைப்பில் தங்களை மறந்து கிடந்தனர்.

அந்த விடுதியின் அறையொன்றிலே கட்டிலில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தாள் அவள். உறக்கம் அவள் இமைகளை முத்தமிடவில்லை. அவள் விழித்துக் கிடந்தாள்.

விடுதியின் மணிப்பொறி பன்னிரெண்டு முறைவிடாமல் ஒலியெழுப்பித் தொடராமல் நின்று நிறுத்திற்று. இழுத்துப் போர்த்திய போர்வையை எடுத்து வீசிவிட்டு கட்டிலிலிருந்து இறங்கி சன்னலின் ஓரமாக வந்து நின்றுள் அவள். 'சில்'லென்று வீசிய காற்று அவளின் தளிருடலைத் தழுவிச் சென்றது. சன்னலின் வழியாக வெளியே நோக்கினுள். எங்கும் காரிருள் கப்பிக் கொண்டிருந்தது. அவளை யறியாமல் அவள் பெருமூச்சு விட்டாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் எங்கோ மலைச்சரிவுகளுக்கப்பால் வேகமாக ஓடி வரும் குதிரை ஒன்றின் குளம்பொலி தவழ்ந்து வந்த காற்றில் மிதந்து வந்தது நிலவிய அமைதியினூடே மெல்ல மெல்ல அந்த ஒலி பெரிதாகிக் கொண்டு வந்தது. கண நேரத்தில் வாடிக்கிடந்த அவள் முகம் பூந்தோட்டமாயிற்று. நெகிழ்ந்து கிடந்த ஆடையை ஒழுங்கு படுத்திக் கொண்டு அறையை விட்டு வெளியே வந்தாள். கல்தரையில் கண்ணாடியை வைப்பது போல மெல்ல அடி வைத்துத் தோட்டத்துப் பக்கம் நழுவினுள் அந்தத் துடியிடையாள்.

தோட்டத்திலுள்ள அந்தப் பெரிய மரநிழலில் இவள் போய் நிற்பதற்கும் குதிரை மேல் வந்த குன்றத் தோளான் குதிரையை கட்டிவிட்டு வருவதற்கும் சரியாக இருந்தது.

"பெஸ்...வந்துவிட்டாயா கண்ணே...

அவன் குரலில் ஆவலும் அன்பும் போட்டியிட்டன. அவள் முகத்தில் இன்ப முறுவல் படர்ந்தது. அவளுடைய வெண்மையான பற்கள் இருளின் மத்தியிலே ஒளி வீசின. மறுகணம் வேண்டுமென்றே முகத்தை வெறுப்பாக வைத்துக் கொண்டாள். அவனோ துவண்டு போனுன்.

நேரமாகிவிட்டதே என்ற கோபமா அன்பே!

அதுதான் உங்கள் வழக்கமாயிற்றே!

நான் என்ன கண்ணே செய்யட்டும்; உலகம் உறங்கும்போது உலவி, விழிக்கும் பொழுது ஒளிந்து வாழும் வாழ்வாயிற்றே என் வாழ்வு! ஊரடங்குவதற்கு முன்னல் வெளியில் கிளம்பினல் போலீஸ் புலிகள் என்மீது பாய்ந்து விடுமே!

அதற்குத்தான் சொல்கிறேன், அஞ்சி அஞ்சி மறைந்து வாழும் இந்த வாழ்வை விட்டு விடுங்கள் என்று!

நீ சொன்னல் இந்த உலகில் நான் எதை வேண்டுமானலும் விட்டுவிடுவேன், ஆனல்...என் அன்பே...என் உயிர்க் கலையை மட்டும்... '

கொள்ளை யடிப்பது கலையா? நீங்கள் செய்யும் பாபச் செயலை மறைக்கக் கலை என்ற பளபளப்பான பட்டுத் திரையா?

பாபச் செயல்! தவறு அன்பே தவறு' அது புனிதச் செயல். அதன் மூலமாகத் தான் சமுதாயத்தைச் செப்பனிடுகிறேன் கண்ணே!

மாற்றான் சொத்தைத் திருடித்தான் சமுதாயத்தைச் செப்பனிடுகிறீரா... விந்தை!

அன்பே! உன் மென்மையான இதயத்திற்கு இந்தக் கொடூரமான உலகின் சுயரூபம் விளங்காது கண்ணே...ஏழையைக் கொள்ளை யடிக்கிறான் சீமான்... அந்தச் சீமான்களைக் கொள்ளையடித்து ஏழைகளுக்கு உதவுகிறேன் நான். சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளைச் சமன் செய்கிறேன், இதில் தவறில்லை அன்பே!

என்றாலும் உலகம்...!

ஆமாம்...சிந்திக்கத் தெரியாதவர்கள் நிரம்பிய உலகம் என்னைக் குற்றவாளி என்றுதான் கூறும். அதற்காக நான் கவலைப்படவில்லையே! என் இதய ராணி நீ என்னை நல்லவன் என்றால் அது ஒன்றே போதும் கண்ணே எனக்கு!

அன்பே...நேரமாகவில்லையா...!

வலிமை வாழும் அவனுடைய இரு கரங்களுக்கிடையே அவள் சுருண்டு வீழ்ந்தாள். துவண்ட அவளைத் தூக்கி அணைத்தான் அவன். பரந்து விரிந்த அவன் மார்பில் படர்ந்து நெளியும் மாலையானுள் அவள். இருளின் மத்தியிலே இன்பக் கவிதை தீட்டினர்கள். காலம் கரைந்து கொண்டிருந்தது.

வரட்டுமா கண்ணே! அவளுடைய நெற்றியிலே அரும்பி யிருந்த வியர்வை துளிகளைத் துடைத்துக் கொண்டே கேட்டான் அவன்.

போகிறீர்களா! ஏக்கம் தொனித்தது அவள் குரலிலே.

இருளின் திரை நீங்குவதற்குள் வெகு தூரம் போய்த் திரும்ப வேண்டும். நாளை நள்ளிரவு வருகிறேன் அதுவரையில் பொறுத்திரு கண்ணே! இதழ்களால் விடைபெற்றுக்கொண்டு குதிரை மேல் தாவினன் அந்தக் குரிசில்.

அவன் போன திசையையே பார்த்துக்கொண்டிருந்தாள் அவள். குதிரையின் குளம்போசை தேய்ந்து மறைந்தது. தன்னை உணர்ந்தவளாய் மெல்ல தன் அறைக்குத் திரும்பினள். அதே நேரம் அந்த மரத்திற்குச் சற்று தூரத்திலுள்ள குதிரை லாயத்திலிருந்து ஒரு உருவம் எழுந்து இருளில் மறைந்து விடுதியை நோக்கிச் சென்றது.

## 2.

பெஸ்!

அந்த விடுதித் தலைவரின் மகள் தான் அவள். பூத்த மலரின் பூரிப்பு அவள் உடலெங்கும் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. அவள் ஓர் தேன் குடம்! அவள் வாலிப உலகின் 'மன உருக்கி' யானுள், சீமான்களின் செல்வத்தைக் கொள்ளையடிக்கும் கொள்ளைக்காரனொருவன் அவள் உள்ளத்தையும் கொள்ளையடித்துவிட்டான். ஊரும் உற்றாரும் அற்ற அந்த நாடோடியின் இதய அரங்கில் ஆடிக்களிக்கும் ஆடுமகள் ஆகிவிட்டாள் அணங்கு பெஸ்.

பெஸ்ஸைச் சந்திப்பதற்கு முன்னல் அவன், அவனுடைய 'அந்தக் கலை'க்காக வாழ்ந்தான். ஆனல் அவளைச் சந்தித்து அன்பை வளர்த்த பிறகோ அவன் அவளுக்காகவும் வாழத் துவங்கினன்.

அந்தக் கொள்ளைக்காரனைப் பிடிக்க சர்க்காரின் போலீஸ் படை எங்கெங்கோ அலைந்து அலைந்து தேடின—தேடித் தேடி அலைந்தன. ஆனல் அவர்களையெல்லாம் ஏமாற்றிவிட்டுத் திரிவது அவனுக்கு ஒரு பொழுது போக்கு!

சமுதாயத்தில் வெளிப்படையாக உலவ முடியாதவன் என்று தெரிந்தும் பெஸ் அவனைக் காதலித்தாள். அந்தப் பன்மாயக் கள்வனின் பணிமொழி அவளின் பெண்மையை உடைத்தது; அவன் குற்றமெல்லாம் மறக்கச் செய்தது. அவன் அவள் வாழ்வானன்; இன்ப மானன்; உலகமானன்.

## 3.

காலை மலர்ந்தது. படுக்கை விட்டெழும்பொழுதே டிம், இரவு கண்ட அந்தக் காட்சியை நினைத்துக்கொண்டே எழுந்தான், அவன் கண்கள் சிவந்தன. 'கள்ளி' அவனை யறியாமலேயே அவன் உதடுகள் முணுமுணுத்தன, அவன் பெருமூச்சு விட்டான்.

டிம்!

அந்த விடுதியிலேயுள்ள குதிரை லாயத்தை மேற்பார்வை பார்ப்பவன்; 'பெஸ்'ஸின் அழகு நீண்ட நாட்களாகவே அவனை பித்தனுக்கிக் கொண்டிருந்தது. அவளை அடைய அவன் தவங்கிடந்தான். குமுறிக் கொண்டிருந்த ஆசையை ஒரு நாள் அவளிடம் கொட்டித் தீர்த்தான். தன் காதலை அறிந்த அவள் தன்னை ஓடிவந்து கட்டிக் கொள்வாள் என்று எதிர்பார்த்தான். அவளோ 'முட்டாள்' என்ற வார்த்தையை வெறுப்பாக வீசிவிட்டு வேகமாகச் சென்றுவிட்டாள். டிம் ஏமாற்றமடைந்தான். அவளை யடைய வழி தேடிக் கொண்டிருந்தான்.

நேற்றிரவு அவளும் அந்தக் கொள்ளைக்காரனும் கூடிக் குலவிய காட்சியை டிம் தன் கண்களாலேயே காண நேரிட்டது. கொதிக்கும் கொப்பரையில் குதிக்கும் நெய்யைப்போல அமைந்துவிட்டது அந்தக் காட்சி. டிம்மின் உள்ளத்தில் சினம் சீறிப் பாய்ந்தது.

காலையிலே எழுந்து முதல் வேலையாக நாணியிருந்து விடுபட்ட அம்புபோல பெஸ்ஸிடம் பாய்ந்து சென்றான் டிம். இரவு நிகழ்ச்சியைப்பற்றி சரமாரியாகக் கேள்விகள் கேட்டான். எவ்வளவோ முயன்றும் பெஸ்ஸின் வாயிலிருந்து எந்த பதிலும் அவனால் வரவழைக்க முடியவில்லை.

டிம் சிந்தித்தான். அந்தக் கொள்ளைக்காரன் தொலைந்தால் பெஸ் தனக்குக் கிடைப்பாள் என்று முடிவு கட்டினன்.

ஆம்; நேற்றிரவு கூறிச் சென்றபடி இன்றிரவு தன் காதலியைச் சந்திக்க நிச்சயம் வருவான். அப்பொழுது போலீசுடன் இருந்தால் எப்படியும் அவனைப் பிடித்து விடலாம் என்று முடிவு கட்டினன் டிம். விஷயமறிந்த பெஸ் வெளியில் இருந்தால் தன் காதலனைத் தப்ப வைத்து விடுவாள் என்பதையும் டிம் நன்றாக அறிவான். தன்திட்டம் வெற்றி பெற டிம் பெஸ்ஸைச் சிறைப்படுத்தினன், யாருமறியா வண்ணம்: சின்னஞ்சிறிய அறை ஒன்றில் அவளைத்தள்ளி கையையும் காலையும் கட்டினன். தப்பிக்க முடியாதவாறு கயிற்றால் அவளுடைய மார்புக்கு நேராக குண்டுகள் போடப்பட்டுச் சுடுவதற்குத் தயாராக வுள்ள துப்பாக்கி ஒன்றைக் கட்டி வைத்து விட்டான். பெஸ் தப்பிச் செல்ல உடலை அசைத்தால் துப்பாக்கி வெடித்து குண்டுகள் அவள் நெஞ்சில் பாயுமாறு கயிற்றால் இணைத்து விட்டான்.

நள்ளிரவில் டிம் விடுதியைச் சுற்றிலும் போலீசுடன் பதுங்கி யிருந்தான், அந்தக் கொள்ளைக்காரனைப் பிடிக்க!

அமைதியும் அந்தகாரமும் சூழ்ந்த அந்த நேரத்தில் குதிரையின் குளம்பொலி தெளிவாகக் கேட்கத் துவங்கியது. பெஸ்ஸின் நெஞ்சம் விம்மித் தணிந்து கொண்டிருந்தது அவளுடைய கூர்மையான செவிகளுக்கு அந்த ஒலி அவள் காதலனின் வருகையைப் பறையறிவித்தது. ஆம்; அவள் இதயத்திலே கோவில் கொண்டுவிட்ட அவன் வருகிறான். குறித்த நேரத்தில் கொஞ்சம் அதிகமானலும் உயிரனையாள் ஊடல் கொள்வாளே என்று ஓடோடியும் வருகிறான். ஆனல் இங்கோ...! ஆசையோடும் அன்போடும் வரும் அவன் மார்பிலே முகம் புதைத்து வரவேற்க பெஸ் இருக்கமாட்டாள் மாருக துப்பாக்கிக் குண்டுகள் அவன் நெஞ்சை முத்தமிட்டு வரவேற்கும்! எண்ணிப் பார்க்கவே பெஸ் உடல் வியர்த்தாள், உள்ளம் நடுங்கினுள்!

குதிரையின் குளம்பொலி வரவர அதிகரித்துக் கொண்டே வந்தது. அவன் விடுதியை நெருங்கிக் கொண்டிருந்தான்! பெஸ் பதறினுள். அவள் எண்ணவானில் நடக்கப் போகும் காட்சி மின்னலென ஒளிர்ந்து மறைந்தது. அவனில்லாத அவள் உயிரில்லாத உடல் போலத்தானே! தன் காதல் தெய்வம் தப்பிப் பிழைக்க வழிதேடினுள். சூழ்ச்சிக்காரர்களின் சூழ்விலிருந்து தப்ப ஒரு வழி; ஆம்; ஒரே ஒரு வழி! அடைக்கப் பட்டுக்கிடக்கும் அவளால் ஆவியனையானைக் காக்க இருக்கும் ஒரே வழி... பெஸ் பெருமூச்சு விட்டாள். அவள் முகத்திலே உறுதியின் ரேகைகள் படர்ந்தன, தனக்குநேரே வாய்பிளந்து நிற்கும் துப்பாக்கியை நன்றியோடு நோக்கினுள், குதிரையின் குளம்போசை மிக மிக அருகில் கேட்டது,

பெஸ்ஸின் மெல்லிய கரம் தன்னையும் துப்பாக்கியையும் இணைத்துக் கட்டப்பட்டிருந்த கயிற்றை அசைத்து விட்டது. மறுகணம் விண்ணைப் பிளக்கும் ஒலியுடன் துப்பாக்கி வெடித்தது.

குதிரை மேல் வந்து கொண்டிருந்த அவள் காதலன் துப்பாக்கி ஒலியைக் கேட்டான், அந்த நள்ளிரவு நேரத்தில் துப்பாக்கி ஒலிக்குக் காரணம்...! அவனுடைய கூரிய மூளை அவனுக்கிருக்கும் ஆபத்தை உணர்த்திற்று. மறுவினாடி குதிரை வந்தவழியே திரும்பி மறைந்து கொண்டிருந்தது,

அவன் தப்பிவிட்டான் டிம் வைத்த குறியிலிருந்து! ஆனல் அவனுடைய உயிரோவியம் பெஸ்...அவளுடைய அழகிய மார்பைத் துப்பாக்கிக் குண்டுகள் துளைக்க உதிரம் அவள் உடலை நனைத்துக் கொண்டிருந்தது, அந்த மெல்லிய உடலிலிருந்து உயிர் விடுதலையடைந்துவிட்டது. உயிர் கொடுத்தேனும் தன் மன்னனைக் காத்து விட்டோம் என்கிற களிப்போ என்னவோ, சவமாகிவிட்ட அவள் நிலா முகத்தில் புதியதோர் களை பொலிவாக இடம் பெற்றிருந்தது!

பெஸ்ஸின் மரணச் செய்தி மறுநாள் நகரத்தில் ஒரு பெரிய பரபரப்பை உண்டாக்கி விட்டது. மாறுவேடத்துடன் உலவிக் கொண்டிருந்த அவள் காதலன் பெஸ்ஸின் மரணத்தை—தான் வாழ உயிர் துறந்த தன் இன்பத்தின் இன்னலமிகு மரணச் செய்தியை அறிந்தான். கொள்ளைக்காரனின் நெஞ்சில் சோகச் சூறாவளி சுழன்றடித்தது. தன் மார்புப் பூங்காவில் துள்ளி விளையாடிய புள்ளிமானும் பெஸ்ஸின் பொன்னுடலைத் துப்பாக்கிக் குண்டுகள் ஊடுருவிப் பாய்ந்த பொழுது என்ன பாடுபட்டாளோ என்றெண்ணும் பொழுது அவன் கண்கள் 'நயாகரா'வாயின.

நீண்டு நெளிந்து செல்லும் சாலைகளிலே அவன் தன்னை மறந்து நடந்தான்; ஓடினன்; பித்தனென ஆடினன் தன் இன்பக் காதலியின் பெயரை பிதற்றித் திரிந்தான்.

வலை போட்டுத் தேடிப் பார்த்தும் அகப்படாத அந்த கொள்ளைக்காரன் வீதியிலே தன்னுணர்வற்றுத் திரிவதைக் கண்ட போலீஸ் சும்மாவிடுமா? அவனை வீதியிலே சுட்டு வீழ்த்திற்று போலீஸ். தன் அன்புக் காதலியிடம் சேர அவன் தேடியலைந்த மரணம் அவனை ஓடிவந்து அணைத்துக் கொண்டது.

# கேள்வி? பதில்.

அஞ்சா நெஞ்சன்

## தோழர் கக்கன் எங்கே?

கே: காங்கிரஸ் மாநாட்டில் த. நா. கா. க. தலைவர் கக்கன் அவர்களைப் பற்றியே பேச்சு இல்லையே—எங்கே சென்றார்?

—எம். ஆர். சாமி, மதுரை.

ப: தோழர் கக்கன் இப்போது தானே தலைவரானார், ஆதலாலே வரவேற்புக் குழுவினர் அவரை எழும்பூர் ஸ்டேஷனிலே நிற்க வைத்திருந்தார்களாம்! வெளியூரிலிருந்து வருபவர்களிடமெல்லாம் ஸ்டேஷனுக்கு வெளியே பஸ் ஓடுகிறது என கூறிக் கொண்டு தோழர் கக்கன் ஸ்டேஷனின் ஒரு மூலையில் நின்று கொண்டிருந்ததாக சென்னை வந்த எனது நண்பர் ஒருவர் கூறினார்.

*

கே: திராவிட முன்னேற்றக் கழக முயற்சியால். தென்னாட்டில் ஒரு பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தி வேலையில்லாத மாணவர்களுக்கு வேலை கொடுத்தால். நிச்சயம் திராவிட நாடு பிரிந்துவிடும் என்பது எனது நம்பிக்கை. உங்கள் அபிப்ராயம் என்ன?

—செ. சம்பந்தன், பொறையார்

ப: தோழரே, தி. மு. கழகத்தில் அவ்வளவு பணபலம் படைத்தவர்கள் யாருமில்லை. தி. மு. கழக முயற்சியால், மக்களின் ஆதரவு பெற்று ஒரு பெரிய தொழிற்சாலை நிறுவுவதாக வைத்துக் கொண்டாலும், அதற்கு அனுமதி தர வேண்டியவர்கள் வடநாட்டு ஆதிக்க பீடத்தாரேயாகும், நிற்க தனிப்பட்ட இவ்வித செயலின் மூலம் நாட்டுப் பிரிவினை கிடைத்துவிடு மென்பதும் நமக்கு உடன்பாடல்ல, தி. மு. கழகத்தினர் மட்டுமல்லாமல், தென்னாட்டைத் தாயகமாகக் கொள்ளும் அனைவருக்குமே இவ்வித தன்மான உணர்ச்சியும், நாட்டுப் பற்றும் ஏற்பட்டால், தொழிற்சாலைகளை அமைத்து வேலையில்லா நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அஸ்திவாரமான அரசியல் உரிமையே பெற்று விடலாம். அந்த வாழ்வு தான் நிலைபெற்றிருக்க முடியும்.

*

கே: அஞ்சா நெஞ்சனே, ஓர் அழகுள்ளவர்க்கும், அறிவுள்ளவர்க்கும் உள்ள வித்தியாச மென்ன?

—எம். பி. சின்னையன். அப்புத்தலை

ப: அழகு வாசனையற்ற ஆனால் கண்களை மட்டும் கவரும் கனகாம்பரம் மலருக்கும், அறிவு மல்லிகைக்கும் ஒப்பாகும்,

*

கே: வற்றாத ஜீவநதிகள் வழிந்தோடும் நாட்டில், வளமான சோலைகள் பூத்துக் குலுங்கும் பூமியில், வந்தாரை வாழவைக்கும் வளமிகுந்த தமிழ் நாட்டில் பஞ்சமும் பட்டினியும் ஏற்படக் காரணம் என்ன?

—எஸ். எம். மீருசாயிபு, கொழும்பு 11.

ப: தமிழகத்தின் ஆட்சி பீடம் லகான் டெல்லி ஏகாதிபத்தியத்திடம் சிக்கி யிருப்பதுதான் அதற்குக் காரணம்.

*

கே: ஆந்திராவில் தேர்தல் பிரசாரம் செய்ய ராஜகோபாலாச்சாரியாரை அழைத்திருக்கிறார்களே அதனால் காங்கிரஸ் வெற்றிகாணுமா?

—டி. ஆர். கேசவன், திருப்பதி

ப: ஐயா, திருப்பதியாரே ஆட்டங்கண்டிருக்கும் ஆந்திர காங்கிரஸ் இத்தேர்தலில் குப்புறக் கவிழ்வதற்குத்தான் ஆச்சாரியாரின் பிரச்சாரம் பயன்படும்.

*

கே: அஞ்சா நெஞ்சனே, ஆவடி காங்கிரசினால், சென்னை ராஜ்ய சர்க்காருக்கு அரசியல் உரிமை அதிகம் கிடைத்திருக்குமா?

—எ. எல். ராகவன், திருவல்லிக்கேணி

ப: அப்படியெல்லாம் 'ஆபத்து' ஒன்றும் நேர்ந்துவிடாது. வடநாட்டு ஆதிக்கக்காரர்களிடம் சென்னை ராஜ்ய சர்க்கார் காவடி தூக்கும் நிலை மிகவும் பந்தோபஸ்தாக முன்னைவிட அதிகமாக வளர்ந்து வரும்.

*

கே: காங்கிரஸ் மாநாடு முடிந்துவிட்டதால் ராஜாஜி அடுத்தபடி என்ன செய்யப் போகிறார்?

—என். ஆர். சந்திரன், கோவை

ப: பத்தாம் பசலி பஜகோவிந்தம் பல்லவியை விட்ட இடத்திலிருந்து தொடங்குவார்.

*

கே: இந்து மத பக்திக்கு மாறாக நடப்பவர்களின் அந்திய காலம் எப்படி முடியும் தெரியுமா?

—வி. ராமதாஸ், திருச்சி

ப: தோழரே! தெரியும், தெரியும். மதபக்திக்கு மாறுபட்டவர்கள், ரமண ரிஷியைப்போல, சிருங்கேரி மடத்து சாமியைப் போல கொடுமைப்பட்ட மரணத்திற்கு ஆளாகாமல், நல்ல முறையில் அவர்களின் அந்திய காலம் முடிவுறும்.

*

கே: ஆவடி காங்கிரஸ் மாநாட்டிலே—பெரும்பாலும் இந்தியிலே பேசப்பட்டதால் ஒன்றுமே புரியவில்லை யென்று குறைபட்டுக் கொண்டே கூட்டம் கூட்டமாக மாநாட்டுக்குப் போனார்களே ஏன்?

—டி. தங்கசாமி, பட்டாபிராம்.

ப: கோயிலிலே புரோகிதர்களால் சொல்லப்படும் 'மந்திரம்' கோயிலுக்கு செல்லும் மக்களில் நூற்றுக்கு 2 பேருக்காகிலும் புரிகிறதா இல்லையே, எனினும்கோயிலுக்குச் செல்லுகிறார்களே ஏன்? அங்கு ஓதப்படும் மந்திரத்தைப் பற்றி அவ்வளவு சாதாரணமாக கருதப்படுகிறது. ஆனால் கோயிலிலே நடைபெறும் மற்ற நிகழ்ச்சிகளை, கேளிக்கைகளைக் கண்டு களிக்கவே கூட்டம் செல்கிறது. அது போலத்தான் காங்கிரஸ் மாநாட்டிலே பேசப்பட்ட பேச்சுக்கள் பெரும்பாலும் உதவாக்கரை—அல்லது வெத்துவேட்டு என்பதாலும் அவ்விடம் நடைபெற்ற மற்ற நிகழ்ச்சிகள் பொழுதுபோக்குக்கு ஏற்றதாக யிருந்ததாலும் கூட்டமும் பெருகியது.

# நாடு என்றால் என்ன?

எனும் தலைப்பில் தோழர். அருப்புக்கோட்டை எம். எஸ். ராமசாமி அவர்கள் தீட்டியுள்ள தொடர் கட்டுரை அடுத்த வாரத்திலிருந்து திராவிடன் இதழில் வெளியிடப் படும்.

பிளாட்டோ, ரூசோ, ஸ்டாலின் போன்ற அரசியல் ஞானிகளின் கருத்துக்களை திரட்டி நம் திராவிடத்துக்கு இலக்கணம் வகுக்கப்படுகிறது இக் கட்டுரையில்.

நாடு என்பதற்கு, ஒவ்வொரு அங்கமாக அரிய விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. கழகத் தோழர்கள் அனைவரும் ஆழ்ந்து படித்துணர வேண்டிய சிறப்புச் செல்வமாகும் இக்கட்டுரை. அடுத்த வாரத்திலிருந்து திராவிடன் இதழில் தொடர்ந்து வரும்.

—நிர்வாகி திராவிடன்

## திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றம்

23—1—55 ஞாயிற்றுக்கிழமை மேற்படி மன்ற கட்டிடத்தில் (எண் 32, இராமானுச கார்டன் தெரு சென்னை 12) பொங்கல் திருவிழா கொண்டாடப்பட்டது.

காலையில் எம். வெங்கடேசன் தலைமையில் பொங்கல் திருநாளைப்பற்றி தோழர்கள் என். முருகேசனார் முன்னிலையில் மன்றத்தின் பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் சுமார் 200 தோழர்களுக்கு இனிப்போடு தேனீர் வழங்கப்பட்டது.

பின்னர், அறிஞர் அண்ணா அவர்களால் பரிசு பெற்ற தோழர் கேசவன் அவர்களால் எம். ஆர். இராதாவைப் போல் இரத்தக் கண்ணீர் நாடகம் நடிக்கப்பட்டது.

மன்ற உறுப்பினர்களின் இன்னிசையுடன் காலை நிகழ்ச்சி 12 மணிக்கு முடிவுற்றது.

மாலையில் மன்றத் தலைவர் மு. மாணிக்கம் தலைமையில் தோழர்கள் என். வி. நடராசன் (திராவிடன் ஆசிரியர்) ஜி. செல்வபதி (செட்டியார்) சி. கே. நாராயணன், ஆர். டி. அரசு முதலானோர் பொங்கல் திருவிழாவின் அவசியத்தைக் குறித்துப் பேசினர்.

அரசாங்க மொழி தமிழ் மொழியாக வேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேறியது.

இறுதியாக மன்ற உறுப்பினர்களால் 'நெசவாளர்களின் கண்ணீர்' என்னும் ஓரங்க நாடகம் நடிக்கப்பட்டு செயலாளரின் நன்றிபகிதலுடன் கூட்டம் 9-மணிக்கு இனிது முடிவுற்றது.

## நன்றி

பொங்கல் திருநாளை முன்னிட்டு எனக்கு வாழ்த்துக்கள் அனுப்பிய கல்லூரி நண்பர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் என் நன்றியறிதலை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பு, வி. சிவப்பிரகாசம்

## சம்பத் சொற்பொழிவு...தொடர்ச்சி

அடுத்தத் தேர்தலிலே பயன்படுத்தப் பார்க்கிறார்கள். அந்தக் காங்கிரஸ் நண்பர்கள் "சோஷியலிஸம்" அமைத்தால் யாருக்கு உபயோகமாக இருக்குமென்று நமக்குத் தெரியும். காங்கிரஸ் முகாமிலே முதலாளிகள் இரண்டறக் கலந்துவிட்டிருக்கிறார்கள். குன்னியூர் சாம்பசிவ அய்யர்—தஞ்சை ஜில்லா போர்டுக்கு தலைவராகி யிருக்கிறார், பழையகோட்டை பட்டக்காரர் இப்போது காங்கிரசில் சேர்ந்துவிட்டார். சேர்ந்த இவர்களெல்லாம் தொண்டர்களாக அல்ல—தலைவர்களாக—ஆட்சி செய்யும் தலைவர்களாக.

தென்னார்காடு ஜில்லா போர்டுக்கு சாமிக்கண்ணு படையாச்சி தலைவராகி யிருக்கிறார். திருவாரூர் வி. என். தியாகராச முதலியார் ஆவடி மாநாட்டின் மேற் பார்வையாளராக இருக்கிறார். ஆகவே இவர்களின் 'சோஷியலிஸம்' எத்தகையதாக இருக்கு மென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

இவர்கள் கூறுவது அர்த்தமற்றிருக்கிறது. இந்த சர்க்கார் ஒரே ஆட்சியின் கீழ் முதலாளித்துவமும் பயமின்றிவாழலாம்—சமதர்மமும் தைரியமாக வாழலாம் என்று கூறுகிறது. இது குரங்கு அப்பம் பிரித்த கதைபோல் இருக்கிறது. இதனை முதலாளித்துவ முகாம் முகமலர்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறது. இந்து, சுதேசமித்திரன் மகிழ்ச்சியோடு எழுதுகிறது. இவைகள் அத்தனையும் நம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திராவிட நாட்டினர் வாழ்வுக்கு இவர்கள் எதிரிகள்—வஞ்சகர்கள—தந்திர முறையை கையாளுகின்றனர்.

விவசாயப் பிரச்சினையை எடுத்துக் கொள்வோம், விவசாயிகளுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டால் தீர்ந்துவிடுமா! நம் நாட்டில் விவசாயத்தையே நம்பி வாழ்பவர்கள் 100-க்கு 80 பேர் இருகிறார்கள். இது சமூக அநீதி. இது ஒழிக்கப்பட வேண்டும் யாரும் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல தனிப்பட்டவர்களிடமிருந்து நிலங்கள் பிடுங்கப்பட வேண்டும். அது மாத்திரம் முடிந்தால் போதாது. அப்படி பிடுங்கப்பட்டால் சமூக அநீதி தொலைகிறது. ஆனால் நாட்டின் நிலை விவசாயிகளுக்கு சுகம் கிடைப்பதில்லை. ஒவ்வொரு விவசாயிக்கும் நிலத்தை பிரித்துத் தருவதாகச் சொல்லுகிறார்கள். சில இடத்தில் ஒரு விவசாயிக்கு ஒரு எக்கரா கிடைக்கும்—சில இடத்தில் இரண்டு ஏக்ரா கிடைக்கும். இதுவே உதவாது. மேலும் நிலத்தை இது துண்டுதுண்டாக்கும். உற்பத்தி குறையும். விவசாயியின் கையிலே 'பட்டாவும்' வாழ்க்கையிலே துக்கமும் நிலவும். நிலப்பிரபுத்துவத்தை ஒழிக்க நாமும் க்யூ வரிசையிலே நிற்போம். அந்த விவசாயியின் வாழ்க்கை சுபிட்சமாக இருக்காது. விவசாயத்தையே நம்பிக் கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். 100-க்கு 50 பேர்தான் விவசாயிகள் என்ற நிலை வேண்டும். அது விவசாயத்திற்கு ஒரு Relief. பாக்கி 30 பேருக்கு என்ன செய்வது! வேறு வேலை என்ன! சர்க்கார்தான் தரவேண்டும். இரும்பு, நிலக்கரி இவைகளைப் போன்ற தொழிற்சாலைகள் பெருக வேண்டும். அதிலே அவர்கள் வேலையைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

இப்போது எங்கே தொழிற்சாலைகள் உருவாகின்றன! வடநாட்டில் பெருகுகின்றன, சர்க்காரின் மூலதனம் அங்கே போடப்படுகின்றது. 'நவபாரதம்' அங்கே—வடநாட்டில் சிருஷ்டிக்கப்படுகிறது. அதிலே மாற்றம் வேண்டுமானால் திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்' அப்போதுதான் நமது முன்னேற்ற எண்ணங்கள்—கனவுகள் நினைவாகும். அதற்கு இம்மாதிரியான மன்றங்கள் பணிபுரிய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

—திரட்டியவர்: என். கிட்டப்பா

# கழகச் செய்திகள்

## இலங்கை

### திராவிடர் திருநாள் கொண்டாட்டம்

கொள்ளுப்பிட்டி அண்ணா பகுத்தறிவு மன்றத்தின் சார்பில் (14—1—55) கொழும்பு கிரீன்பாத் ரோடு மகளிர் தோழமைக் கழக மண்டபத்தில் அமைந்த "வள்ளுவர் அரங்கில்" பொங்கல்விழா கொண்டாட்டம் முத்தமிழ் நிகழ்ச்சிகள் இடம்பெற மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மாலை 5 மணியிலிருந்து இரவு 10 மணி வரை நடைபெற்ற இவ்விழாவிற்கு கொழும்பின் பல பாகங்களிலிருந்தும் ஆண்களும் பெண்களும் சின்னஞ்சிறார்களும் மண்டபத்தினுள் குழுமியிருந்த காட்சி பொங்கி வழியும் தமிழ் ஆர்வத்தை உணர்த்திற்று,

துணைச்செயலாளர் திரு எம், எஸ், குமார் வரவேற்புரை நிகழ்த்திய பின் திரு வை, மு, அழகேசன் விழாவிற்கு தலைமை தாங்கிப் பேசுகையில் பொங்கல் விழாவை தமிழர்கள் சாதிமதபேதமின்றி கொண்டாடி வருகின்றனர் என்றும் தமிழர்களை தன்மானத்துடன் வாழச் செய்வதே இவ்விழாவின் நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்,

திரு டி, எம், பீர்முகம்மது பேசுகையில் பொங்கல்விழா உழவர்விழா என்று பல்வேறு விளக்கங்களோடு கொண்டாடிய இவ்விழாவை 'திராவிடர் திருநாள்' என்று மாற்றி எல்லோரும் கொண்டாடக் கூடிய வாய்ப்பை உண்டு பண்ணிய பெருமை திராவிடர் இயக்கத்தைச் சார்ந்ததென்றும் 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றுங் கல்லாரறிவிலாதார்' என்பதை உணர்ந்து நடக்க முனைய வேண்டும் என்றும் கடந்தாண்டில் ஒவ்வொருவரும் தனது வாழ்க்கையில் எவ்வளவு தவறுகளை செய்து இருக்கிறோம், எவ்வளவு கடமையினின்றும் தவறி இருக்கிறோம் என்பதை எல்லாம் இத்திருநாளிலே நினைவூட்டிப் பார்த்து, ஈண்டும் புத்தாண்டிலாவது அத்தவறுகளைதவிர்த்து வழை பிரதிக்ஞை செய்து கொண்டு புத்துணர்ச்சியுடன் வாழ முற்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்

இ. தி. மு. க. பொதுச்செயலாளர் தோழர் இரா. அதிமணி பேசுகையில் தி. மு க.வினருக்கு விழாக்களே கிடையாது என்று ஆஸ்திக நண்பர்கள் குறை கூறுவது தவறான கருத்தென்றும் தி. மு. க.வினர் பொங்கல் விழாவை தங்களுடைய வாழ்விலோர் திருநாளாக பல ஆண்டுகளாக கொண்டாடி வருகின்றனர் என்றும், அதன் எதிரொலியே இம் மாபெரும் மக்கள் சக்தியை இங்கு காண முடிகிறது என்றும் குறிப்பிட்டார் அண்ணா மன்றத் தலைவர் தோழர் ராம், உமர், தி, மு, க, கொள்ளுப்பிட்டி கிளைச் செயலாளர் தோழர் ஆர், எஸ், திருச்சிற்றம்பலம் ஆகியோரும் பேசினர் பின்னர் இசை, நடனம், நாடகம் நடந்தேறின.

கடைசியாக செயலாளர் திரு கே கே' தமிழ்நாதன் நன்றிகூற 'முத்தமிழ் விழா' முடிவெய்தியது.

---

### கோரநாட்டுக் கருப்பூர்

குடந்தைக்கு அடுத்த கொரநாட்டுக் கருப்பூர் என்ற கிராமத்தில் 16-1-55-ம் நாள் பொங்கல் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலையில்போட்டிப் பந்தயங்களை விழா அமைப்புத் தலைவர் கோ. பொன்னுசாமி துவக்கி வைத்தார். மாலை 4 மணிக்கு ஜனாப் ஆ. அப்துல் ரஜாக் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பொங்கல்விழா பற்றி இலட்சுமணன், கே. சந்திரசேகரன் பி.ஏ, க. ஜெபாகரராசன், சைபுதீன், நா. ஞானசுந்தரம் கே. சுப்பையன், இரெ. சங்கரன் ஆகியோர் பேசினர்.

பின்னர் வெற்றி பெற்றத் தோழர்களுக்கு தோழர் தாண்டவராயன் பரிசு வழங்கினர். இதுவரை இந்தக் கிராமம் கண்டிராத அளவு மக்கள் திரண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. சிலம்பம் குத்துச் சண்டை போன்ற விளையாட்டுகளும் நடைபெற்றன.

---

## பம்பாய்

### புதுச்சால் பால்வாடி

14—1—55 வெள்ளியன்று புதுச்சால் பால்வாடி குடியிருப்போர், சால் கமிட்டியின் சார்பில் பொங்கல் விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. காலை 6 மணிக்கு பால் பொங்க விட்டு, பாலும் பழமும் பரிமாறினர். மாலை 8-மணிக்கு பல அரசியல் சமூக சங்கங்களில் பணியாற்றி வரும் டலருக்கும் அழைப்பு கொடுத்து விருந்தில் கலந்து கொள்ள செய்த உயர்ந்தமுறையில் உணவு பரிமாறப்பட்டது.

வருகைதந்த ஸ்தாபனங்கள்—பம்பாய் மாவட்ட தி. மு. கழகம்

தென் இந்திய ஆ. தி. மகாஜன சங்கம்

கிருத்தவர் சங்கம், தாராவி

திருநெல்வேலி ஜில்லா ஆ. தி. ம. சங்கம்

காந்தாரிய சால், சால் கமிட்டி

தாராவி தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்

பால்வாடி பகுதி பிரதிநிதியாக தோழர் கோபால கிருஷ்ண மேஸ்திரியார்

விருந்து முடிந்ததும் எஸ். டி. ராஜ் தலைமை தாங்கினர். செயலாளர் வருகை தந்த அனைவரையும் வரவேற்றார்.

தோழர் எஸ். தியாகராசன் (ப. தி. மு. க. செயலாளர்) இதுபோன்ற காரியங்களை செய்து எங்களை யெல்லாம் அழைத்து ஒரு சர்வகட்சி விருந்தாக ஏற்பாடு செய்த உங்களின் அன்பிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் இது போன்ற காரியங்களை செய்ய உதவிய உங்கள் அனைவருக்கும் குறிப்பாக இங்குள்ள தாய்மார்கட்கும் இதற்கு மூல காரணமாய் இருந்த தோழர் எ. எல். பெருமாளுக்கும் அவருடன் ஒத்துழைத்த முற்போக்கு எண்ணங் கொண்ட தோழர்கட்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினர்.

அடுத்து தோழர் எஸ். வள்ளிநாயகம் (ப. மாவட்ட தி. மு. க செயலாளர்) குழந்தை வளர்ப்பு, சால் படிப்பகம், சுகாதாரம், அடுத்த ஆண்டிற்கு செய்ய வேண்டிய பணிகளைப்பற்றி விரிவுரை ஆற்றினர். தோழர் ஆ. சொல்வழகன் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

### தா. மு. ந. படிப்பகத் துவக்கவிழா

மேற்படி துவக்க விழா திரு. அயன் பாண்டியன் தலைமையில் 14—1—55 மாலை 7மணிக்கு தாராவி கல்யாணவாடி சிற்றுண்டி சாலையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர் ச. செண்பகப் பாண்டியன் தாளமுத்து நடராசனைப் பற்றி பேசியபின் படிப்பகச் செயலாளராக பி. செண்பகப்பாண்டியனையும் பொருப்பாளராக எஸ். தங்கய்யாவையும், பொருளாளராக இரா. சண்முகவேலனையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

### கொலாபா

14—1—55 அன்று கொலாபா இந்து ஓட்டலில் தேனீர் விருந்து, கழக சார்பாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. பிறகு 8.30 மணிக்கு கூபரேஜ திடலில் பொதுக் கூட்டம் தோழர் எஸ். கே. ராஜு தலைமையில் நடைபெற்றது. கழகப் பாடல்களை தோழர்கள் டி எம். தாஸ் மதுரகோந்திரம் பாடினர்கள். பொங்கலை குறித்து தோழர்கள் எ. எஸ். அன்பரசு, கே. ராமநாதன் கே. எஸ் செகந்நாதன், எஸ். பி. பெருமாள் சொற்பொழிவாற்றினர்கள்

### சௌந்திர பாண்டியனார் பகுத்தறிவு மன்றம்

14—1—55 பகல் 12 மணியளவில் பொங்கல்விழா அன்பகத்தில் நடந்தது. விழாவை மா. இரா. குறள்தாசன் துவக்கிவைத்துப் பேசினர். பொருளாளர் டி வி. துரை அனைவரையும் வரவேற்றுப் பேசி இரா. எ. ரெத்தினசாமி அவர்களை விழாவிற்கு தலைமை தாங்கி நடத்தித் தரும்படி கேட்டுக் கொண்டார்.

தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர்கள் சா. தர்மராசன், வடவைக்குயில், கே. எம். தர்மலிங்கம், எம். எஸ் கணபதி, ஆகியோர்கள் சொல்விருந்தளித்தனர். தோழர்கள் ஐ. ராயப்பன், எம். எஸ். கணபதி ஆகியோர் இன்னிசை விருந்தளித்தனர். தலைவர் முடிவுரையில் எல்லோரும் கைத்தறித் துணியை ஆதரிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

---

## ஆமதாபாத்

ஆமதாபாத் தி. மு. க 1-வது வட்டம் சமல்பூரில், பொங்கலின் புதுத் திருநாளின் மகிழ்ச்சியாக மேற்படி கழக சார்பில் டி. பி பாலகிருட்டினன் அவர்கள் 14—1—55-ல் காலை 8-மணிக்கு கொடியேற்று வித்தார். வந்திருந்த அனைவருக்கும் இனிப்புவழங்கப்பட்டது

---

### சூலூர்

தி. மு. க, சார்பில் கைத்தறி வாரம் 11—1—55லிருந்து 15—1—55 முடிய கொண்டாடப்பட்டது. அதில் கைத்தறித் துணிரகங்கள், அவனசி தாலுக்கா அவனசி டவுல் கைத்தறியாளர் கூட்டுறவு சங்கத்தின் சார்பிலும் சணக்கம் பாளையம் கைத்தறியாளர் கூட்டுறவு சங்கத்தின் சார்பிலும் கொண்டு வரப்பட்டு மொத்தம் ரூ. 1249—7—0-க்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனை முடிவுற்ற கடைசி நாளன்று 15-1-55 மாலை 5 மணிக்கு பொங்கல் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்திற்கு கழகச் செயலாளர் எஸ். என். அற்புதசாமி தலைமை தாங்க கோவை புலவர் சுந்தரராசனார் அவர்களும் கே. வணங்காமுடி, கே. குமாரசாமி ஆகியோரும் பேசினர்.

### பழனி

தோழர் பாவா அவர்களின் இல்லத்தில் பழனி இளைஞர் தி. மு. கழகத்தின் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் தோழர் பி. பெருமாள், தலைமையில் நடைபெற்றது. அதுபோது பிப்ரவரி மாதம் 27-ந் தேதியன்று இளைஞர் தி. மு. க. வின் முதல் ஆண்டு விழாவை நடத்துவதென்றும் தி. மு. க. முன்னணி வீரர்களை அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

### பண்டாறவிளை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக திராவிடர் திருநாள் கொண்டாட்டம் (14—1—55) தை மாதம் 1-ம் தேதி காலையில் கொடி நிறத்தாலான தோரணம் கட்டப்பட்டு கொடி யேற்றப்பட்டது. பின்னர் மாலை 3½ மணியளவில் சிறுவர் விளையாட்டுப் போட்டி நடந்தது. அதில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. பின்னர் மற்ற எல்லா பிள்ளைகளுக்கும் மிட்டாய்கள் வழங்கப்பட்டன.

---

### காந்தவல்லி

திராவிடமணி உணவு விடுதியின் சார்பாக 16—1—55-ல் பொங்கல் விழா 5-30 மணிக்கு நடைபெற்றது. விழாவை தோழர் எம். எஸ். மாடசாமி ஆரம்பித்து வைத்தார். கே. எஸ். சுப்பையா வரவேற்புரை யாற்றினர். ஆர். வேதமுத்து தலைமை தாங்கினர். தோழர்கள் ஆ. ராமசாமி, து. கே. அருணாசலம், கே. ஆர். பொன்னுசாமி, சி. ரா, அதிவீரன் பேசினர். திராவிடமணி உணவு விடுதியின் சார்பாக தேனீர் விருந்து வழங்கப்பட்டது.

---

## இலங்கைத் தோழர்களுக்கு

இலங்கையில், நமது கழகக் கண்ணியத்தைச் சீர்குலையச் செய்யும் வகையில் கழகப் பெயரைப் பயன்படுத்தி ஒருசிலர் நமது கொள்கைக்கு முரண்பட்டசெயல்களிலும், இலங்கை தி. மு. க. தலைமைக் கழகத்தின் ஒழுங்கு முறைக்கு மாறுகவும் நடந்து வருவதாக நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. எனவே இவ்வித வருந்தத்தக்க செயல்களில் ஈடுபட்டுள்ளவர்கள் திருந்தும் வரையில், இலங்கையிலிருந்து திராவிடனுக்கு செய்திகளை அனுப்பும் கிளைக் கழகங்களின் நிர்வாகிகள் அன்புகூர்ந்து இலங்கை தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. அதிமணி அவர்களின் கையெழுத்தைப் பெற்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர், திராவிடன்

---

### இராமேசுவரம்

18—1—55 மாலை 6.மணிக்கு இராமேசுவரத்தில் கே எஸ். பாண்டியன் நினைவுப் படிப்பகச் சிறப்புக் கூட்டம் தோழர் எஸ். துரைராசு தலைமையில் பாண்டியன் திடலில் நடைபெற்றது. பகுத்தறிவியக்கப் பிரச்சாரம் அங்கு நடைபெறுவது இதுதான் முதன்முறையாதலால், (வைதீகர்கள்—வடநாட்டு யாத்ரீகர்கள் உள்பட) ஏராளமான மக்கள் வந்திருந்தனர். வந்திருந்த அனைவரையும் கழகச் செயலாளர் மாரியப்பன் வரவேற்றுப் பேசினர், பிறகு தோழர் சுல்தான் சிறிது நேரம் பேசினர். மதுரை எஸ். முத்து இன்றைய சமுதாய நிலை என்பது குறித்துச் சொற்பொழிவாற்றினர். இறுதியாக தோழர் என். வி நடராசன் இன்றைய சமுக—அரசியல் துறைகளில் காணப்படும் குறைபாட்டினையும் அதை அகற்றுவதற்கு நாட்டுப் பிரிவினை தேவை யென்பதையும் விளக்கிப் பேசினர்.

சொற்பொழிவாளர்களுக்கு கைத்தறி துணிகள் அணிவிக்கப்பட்டன. இக் கூட்டம் ராமேசுவரத்தில் உள்ள மக்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்திருப்பதாகச் செயலாளர் அறிவிக்கிறார்.

### புதுக்கோட்டை

16—1—55 ஞாயிறன்று நெல்லை புதுக்கோட்டை தி. மு. கழக பொங்கல் விழா வி. வி. டி. மைதானத்தில் தூத்துக்குடி தோழர் இராயப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அருணாசலம் இரத்தினம், இரா. சு. தங்கப்பழம் ஆகியோர் பேசினர்.

நாடக மசோதாவை வன்மையாகக் கண்டித்தும், நம் கிராமத்தில் வீரயமாகச் செல்லும் உப்பாற்று நீரை மடக்கி விவசாயத்திற்கு பயன்படுத்துமாறு, மாவட்ட மன்றத்தில் (Dt Board) வேலை செய்யுமாறு வற்புறுத்தி நினைவூட்டியும், புதுக்கோட்டைக்கும், பக்கத்து கிராமம் சிறுபாட்டிற்கும் ஒரு பாதை அமைக்க மாவட்ட மன்றத்தை தூண்டுமாறும், அத் தொகுதி உறுப்பினரை கேட்டுக்கொண்டும். நெல்லை மாவட்ட மன்ற மேற்பார்வையில் வேலை செய்துவரும் 'ரோடுகேங்' கூலித்தொழிலாளர்களின் மாதச்சம்பளத்தை மாதத் துவக்கத்திலே தரும்படி மாவட்ட மன்றத்தை கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின.

### மதுரை நகர்

32-வது வார்டு அனுப்பானடி, பாரதிதாசன் படிப்பகத்தின் சார்பில் 14—1—55-ல் வ. இராமசாமி தலைமையில் திராவிடர் திருநாள் கொண்டாடப்பட்டது. அந்தப் பகுதி முழுவதும் கழகத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஏராளமான சிறுவர் சிறுமியர்களுக்கு தின்பண்டங்கள் வழங்கப்பட்டன படிப்பக கிழக்கு வட்டார இளைஞர்களின் சார்பில் 500 பேர்களுக்கு மேல் கஞ்சி வழங்கப்பட்டு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

# கிழவனும் கடலும்!

டி. புருடோத்தமன், சென்னை.

ஏர்ன்ஸ்ட் ஹெமிங்வே எழுதிய 'கிழவனும் கடலும்' என்ற புத்தகத்தை நேற்றுதான் படித்து முடித்தேன். படித்துவிட்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்ததும் 'திராவிட'னுக்கு இதனுடைய கதையை சுருக்கமாக எழுத வேண்டும் என்று நினைத்தேன், ஆனால் அக்கதையை எங்ஙனம் வரைவது என்ற சிந்தனை என்னை அலட்டியது. —கனவிலே!

கடற்கரை ஓரத்திலே நின்றுகொண்டிருந்தேன். குளிர்ந்த காற்று. இன்ப மூட்டும் நிலவு. மெல்லிய அலை ஓசை! ஆம்! நான் மெக்ஸிகோ கடற்கரையிலே நின்றுகொண்டிருந்தேன்.

அந்தக் கிழவன் தன்னுடைய படகிலேறிக் கொண்டு கரை காண இயலாத கடலிலே அலைகளுக்கிடையிலே அலைந்துக் கொண்டிருந்தான். கடலின் மண்பீடத்தில் நுரையும் அழுக்குமாகக் காட்சியளிக்கிறது. அலைகள் மிகுதியில்லாத அந்த இடத்தில் அழுக்குதான் அதிகம். "அங்கு மீன்களுர் இருக்கும்" கிழவன் நினைக்கிறுன், தூண்டிலில் தொங்கும் வளைவில்தொங்கவிடப்பட்ட காணுங்கழுத்து காலாமீன்களும் தண்ணிரில் மூழ்கிக் கிடக்கின்றன.

கிழவனின் தூண்டிலில் சுமார் பத்து ராத்தல் எடை தோன்றும் 'தூணு' மீன் ஒன்று மாட்டிவிட்டது. கிழவன் அதைப் படகிலே இழுத்துப் போடுகிருன். "அறுத்து இரை போடுவதற்கு நல்ல சான்ஸ்"...

ஒரு மைல் ஆழமிருக்கும் தண்ணீர்ப் பரப்பிலேதான் இப்பொழுது கிழவன் சென்று கொண்டிருக்கிருன். பொழுது போகப் போக கடலின் மீன்களுடன் மெதுவாக அமைதியாகப் பேசியும் ஊரில் 'பேஸ்பால்' போட்டியின் கடைசி குறித்து சிந்தித்து உறககப் பேசியும் தான் அவன் சென்று கொண்டிருந்தான்...

மத்தியான வேளை! கிழவனின் தூண்டில் ஏதோ ஒரு பெரிய மீன் மாட்டிவிட்டது. சாப்பிட்டுவிட்ட இரையுடன் அது கடலின் உள்ளிடத்தில் தூண்டில் கயிற்றையும் இழுத்துக் கொண்டு மிக மிக வேகமாகச் சுற்றித் திரிகிறது. 600 அடிக்கு கீழ்தான் அது சுற்றித் திரிந்துக் கொண்டிருக்க வேண்டும். கிழவன் கயிற்றை மெதுவாக விட்டுக் கொண்டிருந்தான். 1800 அடி வரையில் மீன் போகுமிடத்திற்கு அந்த கயிறும் செல்லும்.

அதோடு 'அரக்கன்' போன்ற அந்த மீன் கிழவனையும், அந்தப் படகையும் இழுத்துக் கொண்டு குதித்துப் பாய்கிறது. இப்பொழுது வடமேற்குப் பகுதியிலே அது சென்று கொண்டிருந்தது. ஆனால் அந்த அரக்கன் மேலே வரமாட்டேன் என்கிருன்......

கிழவன் தன்னுடைய ஆபத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தான், மீன் திடீரென்று கடலாழந்திற்குச் சென்று விட்டால்...படகும் கூடவே சென்றுவிடும்! இல்லையென்றுல் அது தப்பித்தவறி செத்துவிட்டு மூழ்கி விட்டாலும் படகின்நிலைஆபத்துதான். கூடவே சென்றுவிடும் கடலின் ஆழத்திற்கு! ஆனுல் அப்படி யொன்றும் நடைபெறவில்லை, வாயில் மாட்டிக் கொண்ட தூண்டிலையும் கயிற்றையும் இழுத்துக்கொண்டு அந்த மீன் அதே நிலையில் படகையும் இழுத்துக் கொண்டு பறந்துக் கொண்டிருந்தது. கிழவன் புட்டியிலிருந்து சற்று தண்ணீர் குடித்துவிட்டு பாய்மரத்திற்கு அடியில், மரத்தில் சாய்ந்தவாறு மெதுவாக உட்கார்ந்தான்.

ஹவானு கடற்கரை பார்வையிலிருந்து முற்றும் மறைந்து விட்டது. 'பரவாயில்லை', கிழவன் தனக்கே சொல்லிக் கொண்டான்: 'இரவில் பட்டிணத்தின் பளபளப்பான ஒளிமண்டலத்தைப் பார்த்து தெரிந்துக் கொண்டு திரும்பி விடலாம்'.

இரவு முடிந்தது. மீன் தன்னுடைய தீவிரமான சவாரியை இன்னும் முடிக்கவில்லை. இப்பொழுது கிழக்குப் பகுதியைப் பார்த்து குதித்துப் பாய்கிறது. தூண்டில் கயிறு துவளையின் தோலை அறுக்க ஆரம்பித்த பொழுது கிழவன் மெதுவாகக் கையை நீட்டி இரை போட்டு வைத்திருந்த பெட்டியிலிருந்து ஒரு கோணித் துண்டை எடுத்துத் துவளில் கயிற்றிற்கடியில் தாங்கியாக வைத்துக் கொண்டான்.

நீண்டு கிடக்கும் அந்த தூண்டில் கயிறு கடலிலே ஓர் ஒளிக்கோடு வரைந்திருந்தது. கயிறில் ஒட்டிக் கொண்டிருந்த கடல்பாசியின் மகிமைதான் அது.

மின்னும் பொன்னெளித் தாரகைகளைப் பார்த்துக் கொண்டே கிழவன் சொர்...என்று கடலிலே சிறுநீர்ப் பாய்ச்சினுன். கடல்பாசியில் கலந்த தாதுப் பொருள்களின் மின்னல் ஒளி தண்ணீரிலே நீச்சல் விளையாடிக்கொண்டிருந்தன.

மீன் திடீரென்று துள்ளியது. நினைக்காதிருக்கும்பொழுது கிடைத்த அடியைப் போல, கிழவன் படகின் தலைப்பில் நெற்றியை உடைத்துக் கொண்டு குப்புற விழுந்தான். புருவத்திற்குமேல் காயம்பட்டு ரத்தம் ஒழுக ஆரம்பித்தது. 'அந்த பையன் துணைக்கிருந்திருந்தால்!'

பொழுது விடிந்தது. மீன் தன்னுடைய பாய்ச்சலை நிறுத்துவதாகத் தெரியவில்லை. இப்பொழுது அது வடக்குப் புறமாக பாய்ந்துக் கொண்டிருந்தது கிழவன்பாடு சங்கடமாகிவிட்டது. 'என் தங்கக் கட்டியே உன்கிட்டே எனக்கு ரொம்ப அன்பும் மதிப்பும் உண்டு. இருந்தாலும் சாயந்தரத்துக்குள்ளே உன்னெ நான் கொண்ணுப் புடுவே, தெரிஞ்சுக்கோ.'

எங்கிருந்தோ, சின்னஞ்சிறு கிளியொன்று பறந்துவந்து கிழவனுக்குத் துணையாக அந்த தூண்டில் கயிற்றில் உட்கார்ந்து கொண்டது. திடீரென்று அந்தக் கயிறு ஒருமுறை திடுக்கிட்டுக் குதித்தது. கிளி பறந்து சென்றது. கிழவனுடைய கைவிரலில் சிறிது காயம் ஏற்பட்டது.

கிழவன் கயிற்றைத் தன்னுடைய இடது துவளிற்கு மாற்றுகிருன். கிழவனுடைய இடதுகை விரைத்து மரம் போலாகிவிட்டிருந்தது. குரங்குத்தனம் காட்டும் இந்த மீனிடத்தில் போராடிக் கொண்டிருக்க வேண்டுமானுல் ஏதாவது சற்று வயிற்றுக்குள் போட்டால் தான் முடியுமென்று கிழவனுக்குத் தோன்றியது. அவன் பச்சைத் தூணு மீனிலிருந்து ஒரு துண்டை அறுத்தெடுத்து வாயில் போட்டு மெதுவாக அசைபோட ஆரம்பித்தான். நல்ல ருசி! சிறிது உப்பும் கிடைத்திருந்தால் ரொம்ப ஜோராக இருந்திருக்கும். தூணுவிற்கு மேல்பூச்சு போடுவதைப் போல சிறிது பச்சை காணுங்கழுத்தனையும் மேலேபோட்டு மெல்ல ஆரம்பித்தான். அதனின் சத்து இரத்தத்தில் கலக்கும் பொழுது கையினுடைய விறுவிறுப்பு நீங்கிவிடுமென்று கிழவன் நினைத்தான்.

## அரக்கனின் பேருருவம்

படகிற்கு சற்று அருகாமையில் தூண்டில் கயிறு செல்லுமிடத்தில் கடலின் நீர்பரப்பில் ஓர் பெரிய உருண்டை மேலே கிளம்பியது. தூண்டில் சாப்பிட்டுவிட்ட மீனரக்கன் காற்றில் ஒரு முறை பயணம் புரிய விரும்பினுன் போலிருக்கிறது. அதோ! அது ஒரு குதி குதித்தது செப்பின் நிறமியைந்த கோடும் புள்ளிகளும் கவர்ந்த வயிறு மரத்தினுலான பெரிய கரண்டிபோன்றதும் மரமறுக்கும் வாள் போன்ற பற்களையுடைய பெரிய கொம்பு. அதன் உருவத்தைப் பார்த்து கிழவன் வியப்புக் கடலில் மூழ்கினுன் கனவோ, நினைவோ இது! தன்னுடைய படகைவிட இரண்டடி பெரியவனுகத்தானிருக்கிருன்—மார்லின் மீன்!

ஆயிரம் பவுண்டு எடை கொண்ட ஒரு மீனை முன்னெரு நாள் அவன் பிடித்திருக்கிருன். ஆனுல் அன்று துணையாட்கள் உதவியாக இருந்தார்கள். இந்த மீன் இதுவரையில் அவன் பார்த்திருந்த கேள்விப் பட்டிருந்தவைகளைவிட மிகப் பெரியதுதான்!

மீன் தன்னுடைய அகண்டாகாரத்தை ஒருமுறை காண்பித்துவிட்டு திரும்பவும் தண்ணீரில் மூழ்கி தன்னுடைய சவாரியை ஆரம்பித்துவிட்டது. மத்தியான வேளையுடன் கிழவனுடைய கையின் விறுவிறுப்பும் நீங்கிவிட்டது. நம்பமுடியாத அந்த கரத்தை. கிழவன் வெறுப்புடன் பார்த்தான். ஆப்பிரிக்காவின் கப்பலொன்றில் வேலை பார்க்கும் பொழுது மிகப்பெரிய 'சைத்தான்' ஒருவனுடன் போட்டியிட்ட கைதானிது. சனிக்கிழமை காலையில் ஆரம்பித்து திங்கட்கிழமை காலைவரை அவனுடைய கரத்துடன் அயராது இந்தக் கை போட்டியிட்டு கடைசியில் அவனுடைய கை வலுவிழந்து ஒரு பக்கமாய் சாய்ந்தது. அப்படிப்பட்ட இரும்புக் கரண்டி போன்ற கைதான், இப்பொழுது தூண்டில்கயிறு பிடித்து உணர்ச்சியற்று விடுகிறது!

பொழுது சாய்ந்தது. மீன் வடகிழக்கு பக்கமாக பயணம் செய்கிறது. மாலை நெருங்கிய பொழுது ஓர் டாள்பின மீன் கிழவனின் சிறிய தூண்டிலில் மாட்டிக்கொண்டது. 'சாப்பிடுவதற்கு நல்ல சான்ஸ்' என்று நினைத்து அதைப் படகில் இழுத்துப் போட்டான்.

இரவில் நீண்ட நேரமாகிவிட்டது. கிழவன் தன்னுடைய உணவிற்கு தயார் செய்துக் கொண்டிருந்தான். டாள்பின் மீனை அறுத்து சாப்பிட்டான். சின்ன மீனுனதினுல் பச்சையாக தின்பதற்கு நல்ல ருசியுண்டு! கிழவன் அப்படி மென்றுக் கொண்டிருக்கும் பொழுது மீன் திரும்பவும் மிகமிக உயரத்தில் குதித்தது. கிழவன் கயிறை விட்டுத் தந்தான். "அது குதித்துக் கொண்டே இருக்கட்டும். குதித்தால் தான் அதனுடைய நெஞ்சிலிருக்கும் பையில் காற்று நிரம்பும். பையில காற்று நிறைந்தால் அதற்கு அதிகமான ஆழத்திற்கு செல்லமுடியாது" என்று எண்ணினுன்!

மீன் வட்டமாக சுற்றிக்கொண்டிருந்தது. அந்தவட்டம் மெதுவாக சுருங்கக் கொண்டு வந்தது. ஆனுல் கிழவனின் பலமும் குறைந்துக் கொண்டிருந்தது. அவனுடைய கண்களில் கறுப்புப் புள்ளிகள் தோன்றுகின்றன. நெற்றியிலும் கண்ணிற்கு மேலும் இருக்கும் அறுப்புகள் எரிச்சலெடுக்கின்றன. ஒருவேளை மயக்கம் வந்துவிடுமோ என்ற சந்தேகம்.

மீன் மிக அருகாமையில் மேலெழுந்தது. நெஞ்சிலிருக்கும் வர்ணச் செதில்கள் விரித்து அது மரண நாட்டியம் ஆடுகிறது. சாம்பல் நிறமுள்ள இரு மீன் இடையிடையே அதன் வயிற்றிலே ஓட்டியும் சிலவேளைகளில் தொலைவிலிருந்து குறிபார்த்தும் விளையாடிக் கொண்டிருந்தன.

கிழவன் தன்னுடைய எறியும் உளியை சரிபார்த்து அதை எப்பொழுது உபயோகிக்க வேண்டும் என்பதற்கு யோசனை செய்துக் கொண்டிருந்தான். 'அந்தப் பையன் உதவிக்கு இருந்திருந்தால்...!'

மீன் படகின் அடிபாகத்திற்கு மிக நெருங்கி மேலே வந்தபொழுது கிழவன் தன்னுடைய முழு வலுவையும் வரவழைத்து எறியும் உளியை அதனின் உயரமுள்ள இறகிற்கு நேராக வீசியெறிந்தான். உளியானது மீனின் சதைமீது மிக பலமாக உள்ளே போய் விட்டது. அதனுடைய நெஞ்சிலிருந்து இரத்தம் தண்ணீரில் கலங்கியது. மீன் தன்னுடைய வலுவையும் அழகையும் உயிரோட்டத்தையும் காண்பித்துக் கொண்டு காற்றில் சிறிது நேரம் மிதந்தது. பிறகு தண்ணீரில் வீழ்ந்தது. கடல் தண்ணீர், கிழவனையும் படகையும் தாண்டிக் குதித்தது.

'வாடா மீனே வா' கிழவன் படகை மீனுடன் அணைத்து, அதனுடைய தலையிலும் வாலிலும் கயிறை போட்டு இறுக்கி அந்த சடலத்தை படகுடன் கட்டிவிட்டு, காற்றுப் பாயையும் சரிப்படுத்திவிட்டுக் கிளம்பினுன். 1500 பவுண்டுக்குக் குறையாது. கிழவனுக்கு சுக்கானின் தேவை இல்லாமலிருந்தது. பாய்மரத்தின் சாய்வும் காற்றின் நிலையும் தெரிந்து மெதுவாக பயண மாரம்பித்தான்.

படகு தென்மேற்குப் பக்கமாக ஓடிக் கொண்டிருந்தது.

கிழவன் மஞ்சா நிறத்தில் பரந்து கிடக்கும் கடலழுக்கை ஒருகை நிறைய வாரி எடுத்து கடலில் போட்டான். அந்த பாசியில் செனுக்குனிகள் இருந்தது. செனுக்குனியை தனியாக எடுத்து அதனுடைய ஓடு, வால் இவைகளுடன் வாயில் போட்டு மெல்ல ஆரம்பித்தான். தண்ணீரையும் இரண்டு வாய் குடித்துத்தீர்த்து விட்டான்.

## பிச்சை யெடுத்தாராம் பெருமாள் அதைப் பிடுங்கினுராம் அனுமார்!

இனிதான் சுருக்கள் வருவது ஆரம்பமாகிறது. 'மீன் வதம்' முடிந்து ஒரு மணி நேரம் ஆகவில்லை அதற்குள் எப்படியோ வாசனை தெரிந்து கொண்டு ஒரு சுரு வந்துவிட்டது. ஒரு மைல் வரையில் கீழே இறங்கிச் சென்ற மீனுடைய இரத்தம்தான் அதை வரவழைத்தது. நீலவானம் போன்ற முதுகுப் புறம், வெள்ளை வெளேரென மின்னும் வயிறு இவைகளைக் கொண்ட மார்க்கோ சுருதான். ரம்பம் போன்ற வாயை மென்றுக் கொண்டு அது படகிற்குப் பின்னுல் வந்து கொண்டிருந்தது. அந்த வாயில் உள்பக்கம் சாய்ந்து கிடக்கும் எட்டு வரிசைப் பற்களுண்டு. சுரு அந்த மீனை ஒருமுறை கடித்தது. கிழவன் தன்னுடைய எறியும் உளியால் அதை சுக்கு நூருக்கி விட்டான். ஆனுல் அதன் வயிற்றுப் புறத்திலிருந்து 40 ராத்தல் இறைச்சியும் சுருவும் அந்த எறியும் உளியும் ஒன்ருகத் தண்ணீரில் மூழ்கி விட்டது.

எறியும் உளி போய்விட்டதனுல், கிழவன் சுக்கானின் தலைப்பக்கம் ஓர்கத்தியை கட்டிப் போட்டு உட்கார்ந்தான். —'அந்த பையன் இருந்திருந்தால்!'

சுரு கடித்துச் சென்ற பாகத்தில் தொங்கிக் கிடக்கும் இறைச்சியை கிழவன் எடுத்து வாயில் போட்டு ருசி பார்த்தான்.

நானிப்பொழுது எங்கே யிருக்கிறேன்! பாய்க் கப்பல், நீராவிக் கப்பல், ஒன்றுமே தென்படவில்லை. சின்னஞ்சிறு மீனகள், மஞ்சாநிறப் பாசியின் மாலை, இவைகள்தான் கண்ணுக்கெட்டிய தூரம் தெரிகின்றன.

இரண்டு மணி நேரம் சென்றதும்

திரும்பவும் சுறுக்கள் வர ஆரம்பித்தன. இரண்டு பெரிய மரக்கலப்பை போன்ற வாய். தவிடு நிறம் கொண்ட முக்கோணம் போன்ற இறகு; மிகப்பெரியவை. பிணத்தை தின்பவையும் கொலைக்காரர்களுமான இந்த சுறுக்கள், பசியெடுத்தால் படகின் சுக்கானும், படகின் வயிற்றையும் எல்லாம் தின்று ருசி பார்க்க ஆரம்பித்துவிடும். கடலின் தண்ணீர் மெத்தையில் படுத்துக் கொண்டிருக்கும் ஆமைகளின் கையையும் காலையும் சாப்பிடும் சைத்தான்கள் இவைதான்.

அவைகளில் ஒன்று மீனைக் குறி பார்த்து வாய் திறந்து தன்னுடைய வாள் போன்ற வாலை ஒருமுறை வீசியது. அவ்வளவுதான். ஒரு பெரிய துண்டு மறைந்து விட்டது. மற்றொரு சுறு பாதிக்கப்பட்ட இடத்தையே குறி பார்த்து குதித்தது. முதலில் பாய்ந்தவனுடைய கண்ணைக் குறிபார்த்து கிழவன் தன்னுடைய கத்தியால் ஒருகுத்து குத்தினான்.

கிழவன் திரும்பத் திரும்ப குத்திக் கொண்டேயிருந்தான். இரண்டாவது சுறு வயிற்றுப் பக்கத்தில் கடித்து தொங்கிக்கொண்டு நின்றது. கிழவன் தன்னுடைய சுக்கானின் உதவியால் சுறுவின் வாயைப் பிளந்தான்.

கத்திக்குப் பதிலாக ஒரு பெரிய கல் கிடைத்திருந்தால்...என்பது கிழவனின் ஆசை. சிறிது நேரம் சென்றதும் பன்றியைப் போன்ற தடிப்பான ஒரு பெரிய சுறு வந்தது. அதைக் குத்திய பொழுது கிழவனுடைய கத்தியும் தண்ணீரில் மூழ்கிவிட்டது. இனி என்ன இருக்கிறது. இரண்டு சுக்கான். சுக்கான் பிடிப்பதற்கு உதவுகின்ற ஓர் உருண்டையான மரத்துண்டு. பிறகு சூரியன் மறைந்து செல்லும் வரையில் சுறுக்கள் வரவில்லை.

இரவு நெருங்க இரண்டு சுறுக்களும் நெருங்கின. கிழவன் தன்னுடைய சுக்கானால் அடித்து பாதி இறந்த நிலையில் அவைகளை திருப்பி அனுப்பிவிட்டான்.

மீனினுடைய அலங்கோலமான உருவத்தைப் பார்த்து கிழவன் பேசுகிறான். "நான் கடலில் இவ்வளவு தூரம் வராமல் இருந்திருக்கலாம். நானே நம்ப ரெண்டு பேரையும் நாசம் பண்ணிட்டேன். ஆனால் நம்ப ரெண்டுபேருமா சேர்ந்து ரொம்பரொம்ப சுறு மீன்களை கொண்ணுப்புட்டிருக்கோம். இல்லே! நீ எவ்வளவு கொண்ணிருப்பே! சும்மாவா உன்தலையிலே இருக்குதே...... அந்தக் கொம்பு"

அதனுடைய வாய்ப்பக்கம் இருக்கும் அந்த ஈட்டி போன்ற பொருளை பிடுங்கினால் நல்லதோர் வாளாக உதவலாம்! அதை சுக்கானின் தலைமாட்டில் கட்டிவிட்டால் மிகமிக உதவும். கிழவனுக்கு தோன்றியது. ஆனால் அதை அறுத்தெடுப்பதற்கு தகுந்த கோடாரி அல்லது பெரிய கத்தி அவனிடமில்லை.

# எழுமின் தமிழீர்

எழுமினோ தமிழ நாட்டீர்!
திறமினோ விழிகள்! தீயைப்
பொழிமினோ பொழிமின்! இன்னே
போக்குமின் இழிவை! நம்கீழ்
புழுவெலாம் உயர்ந்து வாழப்
புலியனீர் தாழ்வ தாமோ?
இழிவலோ? எழுமின்! ஓடி
ஏறுவம் இன்பக் குன்றிற்கே!

அன்றைநாள் வையம் வென்று
அணி தமிழ் பெருக்கி விந்தக்
குன்றென உயர்ந்தோம்; இன்று
குறுகுவம் ஏனோ மக்காள்?
பொன்றிற்றோ ஆண்மை நெஞ்சம்?
பொசுங்கிற்றோ தோளின் வீரம்?
அன்றன்றோ! பின் ஏன் தாழ்ச்சி?
அடிமையதாய் வடவருக்கு வாழவோ
[நாம்

உலகமெலாம் விஞ்ஞான விழிப்பால்
உயர்வதைக் காணீர்!—எங்கும்
இலங்கிடும் அறிவும், கல்வி,
இன்பமுங் கிடக்க, நாமோ
சிலையினைத் தொழுதும், ஓமத்
தீயினை வளர்த்தும் வாழல்
தலையதாம்! ஏய்க்கின் றாரே!
தமிழரே கேட்ப துண்டோ?

'இல்லை'யென் றெழுவோம்; நெஞ்சத்து
ஏற்றுவம் குறளின் மேன்மை!
வல்லதோ ராட்சி எம்மால்
வடிப்பதுண்டென் றுரைப்போம்
[வாரீர்

வில்லவன், மீனன், வேங்கை
வீரர்தம் பரம்பரை யலோ நாம்!
ஒல்லையில் அதனை யிந்த
உலகினுக் குணர்த்தி நிற்போம்!

துள்ளுமின் தமிழீர்! துயர்துடைக்கத்
துவங்குமின் வெற்றிப் பாதை!
கொள்ளுமின் கொள்கை யுரமே!
கொழுத்துமின் குதர்க்க வாதம்!
உள்ளுமின் வடக்கி னுயர்வு!
உதறுமின் அன்னோர் ஓட்டு!
தள்ளுமின் தருக்கர் ஆட்சி!
தழுவுமின் தனித்ததோ ராட்சியே!

எழுமினோ தமிழீர்! இன்னே!
இருபுயங்கள் துடித்தி டட்டும்!
எழில்முகம் ஒளியே செயட்டும்!
ஏற்றுமின் மீசை தன்னை!
ஒழிமினோ அடிமை வாழ்வை!
ஒலிமினோ புரட்சிச் சங்கம்!
குழிபுகுந்தும் திராவி டத்தைக்
காண்பமே! எழுமினோ தமிழீர்!

புத்தரசு, பம்பாய்.

கிழவன் படகின் தலைப்பில் சாய்வாக படுத்துக்கொண்டு ஹவானா பட்டிணத்தின் ஒளியின்னும் எழிலுருவை எதிர் பார்த்துக்கொண்டிருந்தான்.

இரவு மணி பத்தாகிவிட்டது மெதுவாக ஹவானா பட்டிணத்தின் ஒளிச் சிதறல் தெரிய ஆரம்பித்தது. வெண்ணிலவு வெளிக் கிளம்புவதற்கு முன்னால் பொன்னொளிக்கதிர் மின்னும் மாலை நேரத்து ஆகாயம் போன்ற பன்னிறப் படைப்பு.

இரவின் இடைவேளையில் சுறுக்கள் கூட்டம் கூட்டமாக வர ஆரம்பித்தன, அலைகளின் இறகுகள் தண்ணீருக்கடியில் மின்னலிட்டன.

ஒன்றும் தெளிவாகத் தென்படவில்லை. சுறுக்களின் கும்பல் ஓர் உருவான ராஜீய திட்டத்துடன் போர் துவங்கின. சுக்கானை நன்றாகப் பிடித்துக்கொண்டு கிழவன் தன்னுடைய முழுமூச்சுடன் இடது பக்கமும் வலது பக்கமும் அடிக்க ஆரம்பித்தான். இருளிற்கிடையில் எவ்வளவோ சுறுக்களின் தலைகள் சின்னபின்னமாக்கப்பட்டன. கடைசியில் கிழவனுடைய சுக்கானையும் கடித்துக்கொண்டு ஓர் சுறு தப்பிவிட்டது.

பிற்கு கிழவன் சுக்கான் பிடிப்பதற்கு உதவும் அந்த உருளை வடிவம் கொண்ட மரத்துண்டை கையிலெடுத்தான். போராடினான்! ஒரு சுறுவைப் பார்த்து கிழவன் அதை வீசி அடித்தான்.

கிழவன் தொண்டை கனைத்து சோழை வரவழைத்து தண்ணீரில் துப்பினான். "டேய் சுறு, அந்த துப்பலையும் தின்றுவிடு. அதுக்கப்புறம் ஓர் மனிதனையும் தின்றுவிட்டேன் என்று கனவு கண்டு ஆனந்தமாக இரு—நாயே!"

மார்லின் மீனினுடைய எலும்புக் கூண்டின் மேல் தொங்கிக் கிடக்கும் துண்டுகளைத் தின்பதற்கு சுறுக்கள் திரும்பவும் வந்துக் கொண்டிருந்தன...


கிழவனுடைய சிறிய படகு பட்டிணக் கரையை நெருங்குகிறது. டெரஸின் விளக்குகளனைத்தும் அணைந்து விட்டிருந்தன. கிழவன் படகை ஓர் பாறைக் கூட்டத்துடன் நிறுத்தி விட்டு பாய் மரத்தைக் கழட்டிவிட்டு காற்றுப்பாயை அத்துடன் இணைத்துக் கட்டி அதைச் சுமந்துக் கொண்டு தன்னுடைய குடிசையைப் பார்த்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். ஆனால் நடக்க முடியவில்லை. குடிசை நெருங்குவதற்கு முன்னால் நான்கு அல்லது ஐந்து முறை கிழவன் இடையே உட்கார்ந்திருப்பான்.

அவன் மெதுவாக குடிசையின் கதவைத் திறந்து உள்ளே புகுந்தான். சிறிது தண்ணீர் குடித்து, பழைய பத்திரிகைகளைப் பரப்பி படுத்துவிட்டான், கம்பளியைப் போர்த்திக் கொண்டு படுத்த கிழவன் ஆப்பிரிக்காவின் சிங்கங்களைக் கனவு காண்கிறான். அப்பொழுது நம்புவதற்கு இயலாத அளவு பெரிதான மீனின் எலும்புக் கூண்டை ஹவானா கடற் கரையின் பாறைக் கூட்டத்தில் மோதும் அலைகள், நக்கிக் கொண்டிருந்தன.


# R. லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

148, தங்கசாலைத் தெரு, சென்னை-1




மதுரையிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 92, தெற்கு ஆவணி மூலவீதி, மதுரை
,, 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்

# ஜீவசக்தி லேகியம்

எக்காரணத்தாலேனும் ஆண் அல்லது பெண் இழந்துபோன தேக வலுவையும், சுக்கில சுரோனித போஷாப்பையும் திரும்பவும் பெற விரும்பினால் இந்த லேகியத்தை உட்கொண்டால் குணமடையலாம். போஷாப்பிற்கு உரிய ஜீவாதாரமான பெருமருந்துகள் இதில் சேர்ந்திருக்கின்றன. இந்த லேகியத்தை காலை மாலை 40-நாட்கள் ஆண் அல்லது ஒரு பெண் சாப்பிட்டால் அன்னாருடைய சரீரம் முற்றிலும் மாறி சுந்தரதேகம் பெறுவார்கள். எந்த மருந்தினாலும் தீராத துரித ஸ்கலிதம்—சொப்பன ஸ்கலிதம் நீங்கி நீடித்த இன்பம் எய்துவார்கள்.

20-நாள் காலை, மாலை, சாப்பிடக்கூடிய லேகியம்
டப்பி 1-க்கு விலை ருபா 3—0—0
பாக்கிங், தபால் சார்ஜ், மணிஆர்டர் கமிஷன் 1—6—0

40-நாள் காலை, மாலை சாப்பிடக் கூடிய லேகியம்
டப்பி 1-க்கு விலை ரு. 6—0—0
பாக்கிங் சார்ஜ், தபால் சார்ஜ், மணியார்டர் கமிஷன் 1—11—0

## என். பி. செல்வம் & கோ.

16, ரிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை—1

# ஆவடி காங்கிரஸ்-ஒரு அரசியல் சர்க்கஸ்

## மாயவரத்தில் தோழர். சம்பத் முழக்கம்

21—1—55 அன்று மாயூர, ஆசிரியர் வேலாயுத மன்ற 4-வது ஆண்டு விழாவில் சித்தக்காடு தோழர் கே. ராமையா அவர்கள் தலைமையில் தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் :—

தலைவர் அவர்களே! பெரியோர்களே! தோழர்களே! இன்றைய கூட்டத்தில் நான் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்ததற்கு மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன், அதுவும் அண்ணு ராமையா அவர்கள் தலைமையில் நான் பேசுவது எனக்குப் புதுமை உணர்ச்சியைத் தருகிறது. அந்தக் காலத்திலே சித்தக்காடு ராமையா, கைவல்யம், மா. சிங்கார வேலர் முதலானோர் கட்டுரைகள் 'குடியரசு' பத்திரிகையில் காணப்பட்டது. அறிவியக்கப் படைக்கு வழி திறந்து விட்ட மாவீரர்கள் அவர்கள் அத்தகைய மாபெரும் தலைவர் தலைமையிலிருந்து இப்போது பேசுகிறேன் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமை என்ன! தமிழக வரலாற்றிலே இது ஒரு திருப்புமுகம். இந்த திருப்புமுகத்தில் இருக்கும் நம்மை 200 ஆண்டுகளுக்குப் பின்பு கொண்டாடுவார்கள். சென்ற 25 ஆண்டுகளுக்கு முன்பு தனிக் குரல் ஒன்று ஈரோட்டிலிருந்து கிளம்பிற்று. அது புரட்சி—மறுமலர்ச்சி என்ற நிலைமையை இன்று உண்டாக்குவதற்கு காரணமாயிற்று. நம்மால் அன்று சொல்லப்பட்ட கருத்துக்கள் செல்வாக்காகக் காண்கிறது. பழமைக்காக சுயநலத்தைக் கட்டிக் காத்து வருவதற்காகவே ஏற்பட்டிருந்த எதிர்ப்பு அணிகள் உடைந்து விட்டன.

'சூத்திரன்' என்ருல் ஆத்திரம் கொண்டு அடி என்று சுயமரியாதை இயக்கத் தோழர்கள் அன்று சொன்னுர்கள். சூத்திரன் என்றவார்த்தை கோர்ட்டிலே — சுதேசமித்திரன் பத்திரிகையிலே பேசப்பட்டு வந்தது. இன்று அந்தநிலை இல்லை. 'இன்று அவ்விதம் பேசுவதில்லை ஏன்! அந்த வார்த்தையையே தி. மு. கழகத்தினர் குறிப்பிட்டு பேசுகின்றனர்' என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லக்கூடிய நிலை உண்டாகி இருக்கிறது.

அன்று நாம் சொன்ன கருத்துக்களை எதிர்த்தவர்கள் இன்று அதே கருத்துக்களை அவர்களே சொல்லி தாங்களும் 20-ம் நூற்றுண்டின் மனிதர்கள் என்று காண்பித்துக் கொள்கிருர்கள். காமராஜர் இன்று நாலு வார்த்தையில் பேசுகிருர். இந்த வார்த்தையை அன்று சொல்லியதற்காக சுயமரியாதைக்காரர்கள் அடிபட்டார்கள் — உதைபட்டார்கள். உயிரோடு இருக்கும் சுயமரியாதைக்காரன் என்ருல் 'முரடன்' என்று அர்த்தம். இன்று அந்த இயக்கம் செல்வாக்கு பெற்றுவிட்டது. இவ்விதமான ஆண்டு விழாவில் நாம் அதைக் கவனிக்க வேண்டும். வேலாயுதம் என்பவர் சுயமரியாதைக்காரர். அவ்வூர் சுயநலக்காரர்களுக்கு எதிராக இருந்ததால் கொல்லப்பட்டார்.

அன்றைய இயக்கம் தந்த தலைவர்களில் இன்றைய விழாவுக்கு தலைமை தாங்கும் ராமையா ஒருவர். இயக்கத்திற்கு தஞ்சைமாவட்டம் தனது கோட்டாவை அதிகமாகவே தந்திருக்கிறது. பட்டுக்கோட்டை அழகிரி — மாயூரம் நடராசன்—நாகை மணி ஆகியோர்கள் பெரிய தொண்டர்கள். அன்று தொடங்கிய இயக்கம், எதிர்ப்புகளை எல்லாம் சாய்த்து வீரநடை போட்டு வந்திருக்கிறது. அந்தக் காலத்திலே மடாதிபதிகள் பணம் போட்டு முளையிலே இந்த இயக்கத்தை கிள்ளி எறிய வேண்டுமென்று முயன்ருர்கள். அப்போது ஒன்று சுயமரியாதைத் தொண்டனுக இருக்க வேண்டும். மற்ரென்று அதை எதிர்ப்பவனுக இருக்க வேண்டும்.

1932—33-ல் இருந்த மாபெரும் தலைவர்களில் மா. சிங்காரவேலர் ஒருவர். இன்றைய கம்யூனிஸ்ட்கள் அவரைப் போற்றுவார்கள். ஏனென்ருல் அவர் இப்போது உயிருடன் இல்லை. அவரால் கம்யூனிஸ்ட்காரர்களுக்கு எவ்விதஇடையூறும் இல்லை. அந்த சிங்காரவேலர் அவருடைய கொள்கையை வலியுறுத்த —வெளியிட—"குடியரசு" பத்திரிகையைதான் தேர்ந்தெடுத்தார். சமுதாயத்திலிருந்த குற்றங்களை எடுத்துக்காட்டியது சுயமரியாதை இயக்கந்தான். இன்று சமதர்மத்திற்கு நாட்டிலிருந்த எதிர்ப்பு அணி உடைந்துவிட்டது. நாட்டின் பழைய சம்பிரதாயத்தை அடியோடு ஒழிக்காவிட்டாலும்—சனுதனத்தை அடியோடு அழிக்காவிட்டாலும் அதற்காக ஏற்படுத்தி யிருந்த பலமான அணி உடைந்துவிட்டது. ஆனுல் அதை பிரசாரம் செய்துவந்த இயக்கம் ஆல்போல் தழைத்துவிட்டது.

இன்று சமதர்மத்தைக் கூறிக் கொண்டுதான் எந்தக் கட்சியும் உலவ முடிகிறது. சமதர்மத்தைக் கூறிக்



கொண்டுதான் காங்கிரசிலிருந்து பிரிந்த ஜெயபிரகாஷ் நாராயணனின் சோஷலிஸ்ட் கட்சி உலவ ஆரம்பித்தது. அதன் பிறகு நேதாஜியின் பார்வேர்டு பிளாக் அதை மேற்கொண்டது. இந்து மகாசபையைத் தவிர இந்த இந்திய உபகண்டத்தில் உலவும் எந்தக் கட்சியும் சமதர்மத்தை ஏற்றுக் கொண்டதாகக் கூறியது. காங்கிரஸ் ஒன்றுதான் இதிலிருந்து ஒதுங்கி நின்றது. அதுவும் இன்று 'ஆவடியில்' சமதர்மத்தை ஏற்றுக் கொண்டதாக சொல்லளவில் கூறுகிறது.

1937-ல் ஆச்சாரியார் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட கட்டாய இந்தி நுழைவை அன்று சுயமரியாதைக்காரன் தான் எதிர்த்தான். அப்போது சுயமரியாதைக்காரரை 'குஷ்டரோகி'யைப் போல் பார்த்து எதிர்த்தார்கள். தமிழ்ப் பண்டிதர்கள், காவி ஆடை அணிந்துவந்த சுவாமி மறைமலை அடிகள், சுவாமி அருணகிரிநாதர், ஈழத்து அடிகள் (அப்போது அவர் சாமியாராக இருந்தார். இப்போது அவர் மனிதராகி இருக்கிருர்) ஆகியவர்கள் 'தமிழ்வாழ்க' என்று கூறினர். மற்ற உங்கள் கொள்கைகள் எங்களுக்கு உடன்பாடு அல்ல ஆனுல் இந்தி ஒழிய—தமிழ் வாழ நாங்கள் உங்களோடு ஒத்து வருகிருேம் என்று கூறினர். தமிழ் வாழ்க என்ற கோஷம் நாட்டின் விடுதலைக்கு வித்திட்டது. பிறகு 37-ல் சமுதாயப் பிரிவினையை மொழியின் அடிப்படையில் இல்லாமல் இனத்தின் அடிப்படையில் ஏன் கேட்கக் கூடாதெனக் கருதி 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற கோஷத்தை வெளியிட்டோம்.

ஆவடி காங்கிரஸ் திருவிழா தீர்மானரூபமாக அதை எதிர்ப்பதாகத் தெரிவிக்கிறது. தீர்மானத்தை பண்டித கோவிந்தபந்த் கொண்டு வந்தார், நம்முடைய 'திராவிட நாடு' பிரச்னையை ஒழிக்க வேண்டும் 'நாட்டுப் பிரிவினை' பிரச்னையை எதிர்க்க வேண்டும் என்பது அந்த தீர்மானத்தின் சாரம். இத்தனை ஆண்டுகளாக அவர்கள் காதுகேட்காததுபோல் இருந்தார்கள். இன்று அதே காதுக்கு கேட்டுத் தீரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இந்த அளவுக்கு நாம் வளர்ச்சி யடைந்திருக்கிருேம்.

கல்யாணியில் நடந்த காங்கிரஸ் $3\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவிட்டது. இப்போது ஆவடியில் நடப்பது 10 லட்சமோ 15 லட்சமோ முடிந்த பிறகுதான் கூறமுடியும் என்று சொல்லிவிட்டார்கள். இந்த திருவிழா ஏன்! இதை நடத்த வேண்டிய அவசியம் என்ன! இது ஒரு அரசியல் சர்க்கஸ். அரசியல் தெளிவு அல்ல ஆங்கிலத்தில் Impression by show (இம்ப்ரஷன் பைஷோ) என்று சொல்லுவார்கள். காங்கிரஸ் தலைவர்கள் கொலு வைத்திருக்கும் மாநாடு. மாநாட்டுப் பந்தலுக்கு நேற்று இத்தனை ஆயிரம் செலவாயிற்று—தம்ளர்கள் வாங்கியது இவ்வளவு—என்பதை எல்லாம் பத்திரிகையில் பார்க்கிருேம். காங்கிரசின் சரித்திரத்திலேயே முதன் முதலாக மாநாட்டு வளைவுகளில் தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. சம்பிரதாயம் உடைக்கப்பட்டது. பத்திரிகையில் வெளிவந்த படத்தில் பம்பாய் குஜராத்திகள் தங்கி யிருக்கும் இடத்தைப் பார்த்தால் உங்களுக்குத் தெரியும். முதலில் தமிழில் "பம்பாய்" என்று எழுதப்பட்டிருக்கிறது. பம்பாய்காரனுக்குத் தமிழ் தெரியாது. அதுவும் முதலில் தமிழில் எழுதவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது. இரண்டாவது ஆங்கிலத்திலே — மூன்ருவது இந்தியிலே எழுதப்பட்டிருக்கிறது. மாநாட்டின் வரவேற்புரை தமிழில் நிகழ்த்தப்பட்டது: நம்முடைய தொண்டும் பணியும் அவர்களை அந்த நிலைமைக்கு கொண்டுபோய் விட்டிருக்கிறது. எனினும் இது ஒரு அரசியல் தந்திரம். காங்கிரசின் சுயரூபத்தை கொஞ்ச நேரத்திற்கு மறைத்து வைக்க உதவுகிறது. அதிலும் பழைய சொரூபம் தெரிந்திருக்கிறது. இந்தியில் பேசினுர்கள், தமிழர்கள் புரியாவிட்டாலும் நாகரீக முறையில் கேட்டுக்கொண்டிருந்தனர். தமிழில் பேசும்போது வடநாட்டினர் புரியவில்லை பென கூச்சலிட்டு பந்தலைவிட்டு எழுந்து போயிருக்கிருர்கள். அதைத் தலைவர் கண்டித்திருக்கிருர்

'சோஷியலிசம்' என்பது எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடியவார்த்தை அதை 'சோஷலிசம் போல' என்று பொருள் விளங்கக் கூடாத ஒரு வார்த்தையாகக் கூறுகிருர்கள். 'குதிரையைப் போன்ற' 'கழுதை' என்கிருர்கள். சோஷியலிசம் மாதிரி அதன் அடிப்படையிலே உண்டாக்கப்பட்டது என்று சொல்லுகிருர்கள். நாட்டின் இன்றைய நிலையில் ஒரு கட்சி பொருளாதாரத் துறையில் சோஷியலிசத்தைப் பேசித்தான் தீரவேண்டும், முதலாளித்துவ கொள்கையான தனிமனிதனின் உரிமையைப் பேச முடியாது. ஜெயபிரகாஷ் நாராயணன் சோஷலிஸ கோஷம் எழுப்பியபோது 'அபாய அறிவிப்பு' என்று எழுதிய பத்திரிகைகள் —கிருபளானி சோஷலிஸத்தை கூறும் போது 'அபாய அறிவிப்பு' என்று கூறிய பத்திரிகைகள் 1933-ல் சமதர்மத்தைப்பற்றி நாம் கூறியபோது எதிர்த்த பத்திரிகைகள் இன்று பண்டித நேரு ஆவடித் திருவிழாவில் பேசியதை ஆதரிக்கிறது. இண்டியன் எக்ஸ்பிரஸ், சுதேசமித்திரன் தலையங்கம் தீட்டுகிறது. 1927-ல் இங்கு நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் சமுதாயத் தீர்மானம் ஒன்றை புரட்சிகரமாகக் கொண்டு வந்தது. இன்று 55-ல் பொருளாதார விடுதலைக் கோஷம் ஒன்றை எழுப்பி இருக்கிறது. பார்த்தவுடன் பயந்தோம். சுதேசமித்திரன் எழுதுகிறது. சமதர்மம் என்ற வார்த்தைக்கு தந்திருக்கும் தெளிவு நமக்கு ஆறுதலைத் தருகிறது.

'சமதர்மம்' என்ற வார்த்தையை திருடுகிருர்கள். ஓடிக்கொண்டிருக்கும் ரயிலில் டிக்கட்டு வாங்காமல் பிரயாணிகள் ஓடுவதுபோல சமதர்மம் என்கிற ரயிலில் ஏறுகிருர்கள். லட்சியத்தைப் பறித்துக் கொள்ளுகிருர்கள். அந்த சொல்லை

7-ம் பக்கம் பார்க்க

காங்கிரஸ் அவியல் தொடர்ச்சி...

காணப்பட்ட மாறுபாடுகளை தென்னுட்டுதேசியத் தோழர்கள் நேரில் கண்டதோடு மட்டுமல்லாமல் இந்த தி. மு. கழகத்தார் சொல்லுவது முற்றிலும் உண்மையா யிருக்கிறதே என்றும் ஆச்சரியப்பட்டனராம்!

•

மாநாட்டின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் காமராசர் காணப்பட்டதைப் பார்த்த அமைச்சர் சுப்ரமண்யம், நம்ம. ராஜாஜி குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வராதிருந்தால், இன்று காமராசர் காட்சி யளிக்கும் இடங்களில் ராஜாஜிதானே இருப்பார் அப்பொழுது அவருக்கருகில் நான் தானே நிற்பேன் என்று அவரையும் மீறி வருத்தப்பட்டு வார்த்தைகளைக் கொட்டி விட்டாராம்! இதைக் கேட்டுக் கொண்டே வந்த ஒருவர் நீர்மட்டும் என்ன இந்த மந்திரிப் பதவியில் நீடித்து வாழப் போகிறீர்—சும்மா யிருந்த சங்கை ஊதிக்கெடுத்தானும் ஆண்டி என்பதைப்போல, நாடகத்தடை சட்டத்தைக் கொண்டு வந்து வம்பை விலைக்கு வாங்கி யிருக்கிறீர்— இந்த லட்சணத்தில் ராஜாஜியைப் பற்றி என்னமோ பேசுகிறீரே என கையாண்டி செய்தாராம்! உடனே மந்திரி சுப்ரமண்யத்திற்கு கோபம் அகோர ரூபத்தில் உருவெடுத்ததாம்! அதே சமயம் காதொடிந்த ஊசி மனிதன் அப் பக்கம் வரவே, "மந்திரி சுப்ரமண்யம் என்னை முறைத்துப்பார்க்கும் வகையில் அவமானப்படுத்தி விட்டார். எனவே அதற்கு தக்க சமாதானம் சொல்லியாக வேண்டும்" என்று அந்த காதொடிந்த ஊசி மனிதன் தீர்மானம் நிறைவேற்றி விட்டால் என்ன செய்வது என்று பயந்து சுப்ரமண்யம் தனது கோபத்தை வாபஸ் பெற்று முகத்தையும் சரிப்படுத்திக் கொண்டாராம்!

இப்படியாக நமது பிரத்யேக நிருபர் பல சம்பவங்களைக் கண்டறிந்து மாநாட்டு மேடையருகில் சென்ருராம். அங்கே நேருஜி, பந்த்ஜி, தேபார்ஜி, மோரார்ஜி ஆகிய ஜீக்களெல்லாம் குசுகுசுவெனப் பேசிக் கொண்டிருந்தனராம்! என்னதானிருந்தாலும் தென்னுட்டிலே வேரூன்றி வளர்ந்து வரும் நாட்டுப்பிரிவினை உணர்ச்சியை நம்மால் அடக்க முடியாது என்ருராம் நேருஜி— உடனே பந்த்ஜி, அதற்குத்தான் நாம் சோஷலிஸம் போன்ற பொருளாதாரச் சீரமைப்பு என்ற தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிருேமே—ஐந்தாண்டுத் திட்டம் என்ற பேரால் செய்தது போலவே இதைக் கூறிக்கொண்டே நமது வட இந்தியாவின் வாழ்வை வளம்பெறச் செய்துவிடுவோம் என்ருராம்! •

இந்த செய்திகளை அந்தராத்மாவின் துணையால் திரட்டிக்கொண்டு வந்து சேர்ந்தார் நமது பிரத்யேக நிருபர் 'மூர்த்தி'

# காம்ரேட் கழுகாசலனார் அங்கலாய்ப்பு

## சுத்தானந்தருக்கு ஸ்டாலின் பரிசு?

ப. நெடுமாறன்

சிரித்தேன், சிரித்தேன்- வயிறுகுலுங்க சிரித்தேன். விழிகளில் நீர்பெருக சிரித்தேன். சிரிப்பொலி கேட்டு தெருவோடு போய்க் கொண்டிருந்த காம்ரேட் கழுகாசலம் உள்ளே வந்தார்.

என்னப்பா சிரிக்கிறாய். காணாததைக் கண்டுவிட்டாயோ! நடவாதது நடந்துவிட்டதோ, கேட்காததை கேட்டுவிட்டாயோ! என கேள்விக் கணைகளை தொடுத்துக் கொண்டே போனார்.

எனக்கு மேலும் சிரிப்பு பொங்கிற்று. அதுவும் அவரைக் கண்டவுடன் அளவு கடந்த சிரிப்பு வந்தது எனக்கு, அவருக்கோ சினம் பிறந்தது. கடுகோபத்துடன் புறப்பட்டார். கையைப் பிடித்து இழுத்து உட்காரச் செய்தேன்.

பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கின்றது. அதுவும் புதிய கண்டு பிடிப்பு! அதைப் படித்தவுடன் சிரிப்பு வந்தது என்றேன்.

ஏழைகளின் உதிரம் குடிக்கும் சேத் டால்மியா கோசம்ரட்சணை விழாவில் வாயில்லா பிராணிகள் படும்பாட்டை எண்ணி எண்ணி மனம் குன்றி கண்ணீர் வடித்துள்ளாரே அதுவா! எனக் கேட்டார் கழுகாசலம். வேகம் ததும்பிற்று அவரது வார்த்தைகளில்.

அதைவிட வேடிக்கையானது என்றேன்,

அமெரிக்க யுத்த வெறியர்கள், டல்லஸூம், நிக்ஸனும் வந்தபோது வரவேற்று விருந்துண்டு மகிழ்ந்து, கூடிக் குலாவிய போதெல்லாம் அவர்களிடம் தனது கம்யூனிஸ்டு ஒழிப்பைப் பற்றிய வீரப்பிரதாபங்களை மட்டுமே பேசிவிட்டு இப்பொழுது அணுகுண்டுகளை ஆழ்கடலில் எ... எனக் கொக்கரிக்கும் குல்லூ... பட்டரின் அசட்டுத்தனத்தை எண்ணிச் சிரித்தீரோ என வெற்றிப் புன்னகையோடு கேட்டார் கழுகாசலம்!

இதிலென்ன சிரிக்க இருக்கிறது. ஆச்சாரியாரின் வாடிக்கைதானே இது. ஒரு புறம் சாதி முறையைச் சாடுவார். மற்றொரு புறம் குலத் தொழிலை கைவிடாதீர் என்பார். இராமன் சாதாரண மனிதனே என்று எழுதுவார். பிறகு கடவுள் அவதாரம் என்று கூப்பாடு போடுவார்! எனவே அதைக் கேட்டு சிரிக்கவில்லை. என் சிரிப்பிற்கு காரணமே வேறு என்றேன்.

தோழருக்கு சலிப்பு பிறந்தது. அப்படி என்ன சிரிப்பு தரும் சம்பவம், எங்கே கொண்டாரும் அப்பத்திரிகையை என்று வாங்கி வாசிக்கலானார்.

கோவையில் சமாதானக் கூட்டம். யோகி சுத்தானந்தபாரதி உலக சமாதானம் குறித்துப் பேசினார்......இதுவரை படித்த கழுகாசலம் என்மீது கோபப் பார்வையை வீசினார். மேலே படியுங்கள் என்றேன்,

> **உலக சமாதானம், உலக சமாதானம் என பலபேர் கூறுகின்றார்கள், எங்கெங்கோ தேடி அலைகின்றார்கள். இந்த இருபதாம் நூற்றாண்டில் தேடப்படும் உலக சமாதானத்தைப் பெறும் வழியை அன்றே பல்லாயிரம் வருடங்களுக்கு முன் பகவத்கீதையில் பகவான் தெளிவாக திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.**

இதில் என்னப்பா சிரிக்க இருக்கிறது என்றார் கழுகாசலம். வழக்கம்போலவகுப்புவாத கண்ணோட்டத்தில் பார்க்கின்றாயே என்ற கேள்விக்குறி அந்த சர்வ தேசிய கண்ணோட்டத்தின் கண்களிலே தென்பட்டது!

... புரிந்து கொண்டேன் தோழரே, உமது எண்ணத்தை. எனது சிரிப்பிற்கு காரணம் அறியுமுன் சில கேள்விகளுக்கு பதில் கூறும் என்றேன்.

பகவத்கீதை, எப்பொழுது, எந்த சூழ்நிலையில், யாரால் யாருக்கு, எதற்காக எப்படிக் கூறப்பட்டது தெரியுமா என்றேன்.

கழுகாசலம் கம்பீரமாக என்னை ஒரு பார்வை பார்த்தார். பிறகு புராணங்களில் அவ்வளவு பரிச்சயம் கிடையாது என அலட்சியமாகக் கூறினார்!

தெரியாது எனத் தள்ளிவிடாதீர். நான் கூறுகின்றேன் கேளும். ஒரு குலத்தில் ஒரே குடும்பத்தில் சகோதரர்களாகப் பிறந்து இரத்த பாசமும், இணைபிரியாத நேசமும் கொண்டு பரிவோடும் பற்றோடும் பழக வேண்டியவர்கள், நாடாளும் ஆசை நல்லறிவை மறைக்க, மனமாச்சரியங் கொண்டு, இருபெரும் பிரிவாகப் பிரிந்து, வாளும் வேலும். வில்லும் அம்பும், சூலமும் சுழலும் தடியும், தாங்கி அணிதேர் புரவி; ஆட்பெரும் படையும் சூழ, களத்திலே எதிரும் புதிருமாக நிற்கின்றார்கள், சகோதர பாசம் நிலவவேண்டிய கண்களிலே கொலைவெறி கூத்தாடுகிறது. கட்டித் தழுவி வரவேற்க வேண்டிய அன்புக் கரங்கள், கொடிய ஆயுதங்களை ஏந்தி கொலை செய்யத் துடிக்கின்றன. இந்த நிலையில் அன்பையும் பண்பையும் மறந்து, பாசத்தையும் பற்றையும் துறந்து, கௌரவர்களும் அவர்களைச் சார்ந்தோரும், பாண்டவர்களும் அவர்களைச் சேர்ந்தோரும் குரு க்ஷேத்திர களத்திலே அணிவகுத்து நிற்கின்றார்கள். பாண்டவர் பெரும் படைக்குத் தலைமை தாங்கிய விஜயன் தேரிலே அமர்ந்து அதை மாயனும் கண்ணன் செலுத்திவர, களத்தின் மத்தியிலே வந்து நிற்கின்றான். அவனது கண்கள் நாற்புறமும் வட்டமிடுகின்றன. திடுக்கிடுகின்றான். திக்பிரமை யடைகின்றான்.

பகைவரின் படைவரிசையைக் கண்டா? அல்ல. அதைவிட மேலான இரத்த பாசம்! ஆம் இரத்தபாசம் அவனை ஈர்த்திழுக்கின்றது. எதிரிலே தள்ளாத வயதிலே பேரனைத் தழுவி வரவேற்று பாசத்தையும் பரிவையும் சொரிய வேண்டிய பாட்டனார் பீஷ்மர், போர்க் கோலங்கொண்டு வில்லும் வேலும் தாங்கி வில் விஜயனிற்கு வீர வரவேற்பளிக்கக் காத்திருக்கின்றார்.

அதோ! ஆசான்! வாளை சுழற்றவும், வேலை வீசவும் வில்லை வளைக்கவும் கற்றுத் தந்த துரோணர் நிற்கிறார். கற்ற வித்தையை குருவிடம் காட்ட வேண்டிய நிலை. இன்னும் உற்ற நண்பர்கள் அசுவத்தாமன், கிருபன், விதர்ணன் முதலானோர். எதிரிலே நிற்கின்றனர்! மற்றும் மாமன் முறை கொண்டோர், மைத்துனர் வழி வந்தோர், சகோதர பாசங் கொண்டோர், சீரிய நேசங் கொண்டோர் அனைவரும் எதிர் அணி வகுப்பிலே. இவர்கள் அத்தனை பேரையும் கொன்று இரத்த ஆற்றிலே நீந்தி, பிண மலைகளைக் கடந்து அரியாசனம் ஏறவேண்டும்! எண்ணும்போது எண்சாண் உடல் சிலிர்த்தது அர்ச்சுனனிற்கு. எனவே திடுக்கிட்டான். காண்டீபத்தை தூக்கி எறிந்தான். அம்புறாத்தூணியை அகற்றினான். கவசத்தைக் களைந்தெறிந்தான். தேர்த் தட்டிலே மயக்கமுற்று சாய்ந்தான்.

**கண்ணன் இதைக் காணுகின்றான். சுத்தானந்தர் கூற்றின்படி கண்ணன் என்ன செய்திருக்க வேண்டும். அப்பா அர்ச்சுனா; கவலையை அகற்று போரிடுவது கூடாதுதான் துரியோதனனிடம் சென்று மீண்டும் சமாதானம் பேசுகின்றேன் முடிந்தால் பார்ப்போம். இல்லாவிடில் கானகம் செல்லுவோம் என்றல்லவா சமாதான கீதம் பாடியிருக்க வேண்டும். கலகமூட்டும் கண்ணன் செய்வானா அத்திருத்தொண்டை! பாரதப் போரின் மூல காரணமே கண்ணன் என பாரதம் பறைசாற்றுகின்றதே, பரத கண்டத்தில் மக்கள் பாரம் பெருத்துவிட்டதாம். அதைக் குறைக்க வேண்டும் என்று கருதி பகவான் கண்ணனாக உலகில் அவதரித்து துஷ்ட நிஷ்ட சங்காரம் செய்யவே பாரதப் போரை நடத்தினார் என பரந்தாமனின் பிறப்பு இரகசியத்தை பாரதமே தெளிவாகக் கூறுகின்றதே.**

எனவே மாயன் மயங்கிக் கிடந்த மைத்துனனை தட்டி எழுப்பி. வில்விஜயனே, வீராதிவீரனே, கலங்காதே, உன்னை மலையென நம்பி தலையில் முடிசூட இருக்கும் உன் தமையன் தருமனைப் பார். மனதை திடப்படுத்திக்கொள். மாமனென்றும் மைத்துனனென்றும் பாராதே. இரத்த பாசமுடையவர்கள் என்று இரங்காதே, குருவென கலங்காதே, பாட்டனென்றும் பேரனென்றும் பதறாதே! நீ **க்ஷத்திரியன்**. அதை மறந்துவிடாதே, உன் கடமை போர் செய்தல். வில்லை வளைத்து நாணேற்று. சரங்கள் சீறிப்பாயட்டும். சிரங்கள் அற்றுவிழட்டும் குருதிக்கடல் பெருகட்டும், பிணமலைகள் குவியட்டும், என கீதோபதேசம் செய்கின்றான் கண்ணன். அப்பொழுதும் அர்ச்சுனன் தெளிவு பெறவில்லை. உடனே தனது பிறப்பின் இரகசியத்தை உணர்த்துகின்றான்! பாற்கடலில், பாம்பு படுக்கையில் பத்தினிகளோடு துயில் கொள்வதைவிட்டு ஆயர் பாடியில் அவதரித்த மகிமையின் காரணத்தை அர்ச்சுனனுக்கு உணர்த்தி போர் வெறியேற்றி பாரதயுத்தத்தை நடத்துகின்றான் கண்ணன். **இவ்வாறு போர் வெறியேற்றிய பகவத்கீதை சமாதானத்தின் முன்னோடியாக சுத்தானந்த பாரதியாரால் காட்டப்படுவதைக் குறித்து சிரிக்காமல் என்ன செய்வது தோழரே என்றேன்!**

கழுகாசலம் சிறிது நேரம் மௌனம் சாதித்தார். பின்னர் கூறினார். நீங்கள் இவ்வளவு தீவிரமாக சிந்திக்கக் கூடாது. ஏதோ பழைய காவியங்களில் இருந்து உதாரணம் காண்பிக்க வேண்டும் என்று தான் அதைக் குறிப்பிட்டாரே ஒழிய நீங்கள் நினைப்பது போல...எனப்பூசி மெழுகினார்!

சுத்தானந்த பாரதியைவிட காம்ரேட் கழுகாசலத்தின் பித்துக்குளிதனத்தைக் கண்டு எனக்கு மேலும் சிரிப்பு வந்தது! பண்டைப் பெருமையைக்காண வேண்டும் என்றால் பகவத்கீதையிலா காணுவது! பிணமும் நிணமும் அழுகிக்கிடக்கும் சேற்றிலா நறுமணத்தைத் தேடுவது. பத்தினியின் பெருமையை விளக்கப்புகுந்தவன், கண்ணகியின் கதையை கைவிட்டு, தவவேடத்தில் வந்திருப்பவன். தன்னைக் கைப்பிடித்த நாயகன் அல்ல என்பதை அறிந்த பின்னும் இந்திரனுடன் கூடி மகிழ்ந்த அகலிகையின் கதையை எடுத்தோதினால் நாட்டில் உள்ள நல்லோர் நகையாரா! சமாதானத்தின் சாயல், சியாமள வண்ணன் கூறிய பொன்னுரையிலா காணப்படும்? பண்டைக் காவியத்தில் இருந்து மேற்கோள் காணவேண்டுமென்றால், பாரதியார் பகவத்கீதையை கைவிட்டு, பழந்தமிழ் பாடல்களுக்கல்லவா சென்றிருக்கவேண்டும். எத்தனை எத்தனை மணிகள் அங்கே சிதறிக் கிடக்கின்றன. ஒன்று கூறுகின்றேன் கேளும்.

சோழன் நலங்கிள்ளி என்பானுக்கும் சோழன் நெடுங்கிள்ளி என்பானுக்கும் சோழ நாட்டின் அரசுரிமை குறித்து கருத்து வேற்றுமை உண்டாகி, உறையூருக்கருகில் போர் நிகழ இருக்கிறது. இருதரப்பினரும் ஒரு குடிப்பிறந்தார் என்பதைமறந்து களத்திலே, முடிவுரிமையை முடிவுகாண புறப்படுகின்றனர். செய்தி கோவூர் கிழார் என்னும் புலவர் கோமானுக்கு எட்டுகிறது, உள்ளம் பதைபதைக்க ஓடிவருகின்றார் இருவரையும் காணுகின்றார். புலவர் மனம் பதறுகிறது. அறிஞரைக் கண்டதும் அரசர்கள் இருவரும் மரியாதை செய்கின்றனர். புலவர் பெருமான் இருவரையும் உற்று நோக்குகின்றார். இருவர் கருத்தையும் ஆத்திமாலை அலங்கரிக்கின்றது. இருவர் கரங்களிலும் புலிக்கொடி மிளிருகின்றது. இருவரும் தமிழர்கள். ஒருபக்கம் வியப்பும் மற்றொரு பக்கம் வேதனையும் அவர் மனதை அரிக்கின்றன. மெதுவாகப் பேச ஆரம்பிக்கின்றார். "நாடாளும் என் நண்பர்களே, எந்த பகைப் புலத்தை அழிக்க இருவரும் வாளேந்தி வந்

# செய்திகள்

### நாகை

14-1-55 மாலை 3 மணிக்கு நாகை தி. மு. கழகக் கட்டிடத்தில் பகுத்தறிவுப் படிப்பகத்தின் சார்பில் பொங்கல் விழாவினை யொட்டி கட்டுரைப்போட்டியும், போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கிய பின்னர் 6 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்களைக்கொண்டு அரிய சொற்பெருக்கும் ஆற்றப்பட்டது

15-1-55 ம் நாள் அழகிரி சொற்பயிற்சி மன்றத்தின் சார்பில் தோழர் புலவர் குழந்தை அவர்களைக் கொண்டு சொற்பொழிவும் காலை பேச்சுப்போட்டியும் நடைபெற்றது. பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு புலவர் குழந்தை அவர்களால் பரிசு வழங்கப்பட்டது. மாலை புலவர் குழந்தை அவர்களின் சொற்பொழிவிற்கு பின்னர் இன்னிசை கச்சேரியும் நடைபெற்றது

16-1-55 மாலையில் ஓர் பொதுக் கூட்டம் தோழர் ஜம்பு அவர்களைக்கொண்டு மிக சிறப்பான முறையில் நடைபெற்றது. மூன்று தினங்களும் பொங்கல் விழா நாகையில் சிறப்பித்துக் காட்சியளித்தது.

### குளித்தலை

16-1-55 ஞாயிறு மாலை 5 மணிக்கு குளித்தலை மஜீத் பாண்டியன் மன்ற அலுவலகத்தில் பொங்கல் விழா நடைபெற்றது. தோழர் இரா. ராமச்சந்திரன் தலைமை தாங்கினர். தோழர் தி. வி. முத்துகிருஷ்ணன் கொள்கைவீரன்குமாரவேலு படத்தை திறந்து வைத்து பெரும் உரையாற்றினர். ஆசிரியர் ஏகாம்பரனர் 'பொங்கல் விழா' என்னும் தலைப்பில் விரிவுரை ஆற்றினர்.

### கவசம்பட்டு

16-1-55 அன்று காலை தி. மு. கழக தோழர்கள் பேண்டு வாத்தியம் முழங்க கழகக் கொடிகளுடன் ஊர்வலமாக சுற்றிவர தாழ்த்தப்பட்ட பெருங்குடிமக்கள் ஆரவாரத்தோடு வரவேற்று ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள் பிறகு பொருளாளர் சாமிநாதம் இல்லத்தை வந்தடைந்து அவரால் கழகத்திற்காக விடப்பட்ட வாசகசாலையை செயலாளர் தெய்வசிகாமணியால் திறக்கப்பட்டும் தலைவர் படங்களை மாவட்டப் பிரதிநிதி வில்வநாதனுல் திறக்கப்பட்டும் உதவி செயலாளர் சாமிநாதன் கழகக் கொடியை பலத்த கைத்தட்டலுக்கிடையே ஏற்றி வைத்தார்.

### அறந்தாங்கியில் பொங்கல் விழா

7—1—55 முதல் துவங்கி போட்டிப் பந்தயங்கள், பூப்பந்தாட்டங்கள், கால் பந்து, கைப்பந்து, சைக்கிள் இன்னும் பல விளையாட்டுப் போட்டிகளும் கட்டுரை, கவிதை, சித்திரம் முதலிய போட்டிகளும் நடத்தி 16—1—55-ல் விழாப் பொதுக் கூட்டமும் பரிசளிப்பும் நடைபெற்றன: தோழர் மீ. சு. இளமுருகு வெற்றி பெற்றவர்களுக்கு கைத்தறி ஆடைகளை பரிசளித்து சொற்பெருக்காற்றினர். பிறகு தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் விழாபற்றி அரியதோர் சொற்பெருக்காற்றினர். அசோகன் நன்றி கூறலுடன் முடிவுற்றது.

### அறந்தாங்கி

12—1—55 புதன்கிழமை யன்று தி. மு: கழகச் சார்பில் தோழர் ப. நடராசன் தலைமையில் கழகத் தோழர்கள் ஏராளமான கைத்தறித் துணிகளை கூட்டுறவு நிலயத்திலிருந்து பெற்று நகர முக்கிய வீதிகளில் விற்பனை செய்தனர். விற்பனைப் படையில் தோழர்கள் மாதிராவும் பந்தாவும் இசை வழங்கினர். பொதுமக்களின் பெருத்த ஆதரவுக்கிடையில் ரூ. 310-க்கு விற்பனை அமைதியான முறையில் நடந்தேறியது.

### மாச்சம்பாளையம்

இவ்வூர் அழகிரி படிப்பகத்திற்கும் தி. மு. க. கிளைக்கும் நடப்புவருடத்திற்கான நிர்வாகிசளை தோழர் ந. கிருட்டிணசாமி தலைமையில் 23-12-54 நடந்த உறுப்பினர்கள் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர் வீ. கந்தசாமி, பொருளாளர் ந. மயில்சாமி, துணைசெயலாளர் கு. மருதப்பன், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் 7 பேர்.

15-1-55 சனிக்கிழமை அன்று தோழர் ந. கிருட்டிணசாமி தலைமையில் பொங்கல் விழா சிறப்பாக நடந்தது. காலை 9 மணிக்கு ந. பழனிசாமி நாட்டுப் பண்பாட, தோழர் ந. கிருட்டிணசாமி கழகக் கொடியேற்றுவித்து தலைமையுரை ஆற்றினர். தோழர்கள் வீ. ராயப்பன், ரங்கநாதன், செயலாளர் வீ. கந்தசாமி, ஆகியவர்கள் பொங்கல் விழா சிறப்புபற்றி சொற்பொழிவாற்றினர்கள். ந. மயில்சாமியின் குழந்தை பூங்கோதை ஆண்டு நிறைவு முன்னிட்டு எல்லோருக்கும் இனிப்பு வழங்கினர்.

### வெள்ளைக்கோட்டை

மேலத்தெரு இளைஞர்களின் சார்பாக 1—12—54-ம் தேதி "பகுத்தறிவு மன்றம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. மேற்படி மன்றத்துக்கு கீழ்க்கண்டவர்கள் நிர்வாக உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். செயலாளர் மா. சி. சுந்தர மகாலிங்கம், பொறுப்பாளர் பா. சங்கரலிங்கம், நிதிக்காப்பாளர் க சங்கரலிங்கம். நிர்வாக உறுப்பினர்கள் 5 பேர் ஷ மன்றத்தின் சார்பாக 16—1—55 திராவிடர் திருநாளாகிய தைப்பொங்கலை முன்னிட்டு வெள்ளைக்கோட்டை பாரதிதாசன் தெருவில் கவிஞர் எம். எஸ். இராமசாமி அவர்கள் கொடியேற்றி வைத்துப் பேசினர். விழாவில் ஏராளமான பெரியோர்களும் வாலிபர்களும், தாய்மார்களும் கலந்து கொண்டார்கள். விழா முடிவில் குழந்தைகளுக்கு திண்பண்டங்கள் வழங்கப்பட்டன.

### பேரளம்—ஆலந்தூர்

14-1-55 அன்று மாலை 4-30 மணிக்கு தி. மு. கழக சார்பில் திராவிட திருநாளாகிய பொங்கல் நாளை தோழர் பி மகாலிங்கம் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் எஸ். சின்னையன், பி. மணாளன், எ. எம். பஷ, ஆ. ம. வேலன் சொற்பொழிவாற்றினர்.

### மாராந்தை

இங்கு தி. மு. க. ஆதரவாளர் சார்பில் பொங்கல்விழா கொண்டாடப்பட்டது

மாலை 2 மணியளவில் திரு இரா. வேலாயுதபாண்டியன் தலைமையில் போட்டி விளையாட்டுகள் நடைபெற்றன. வெற்றி பெற்றோருக்கு திரு. சி. சுப்பிரமணியர் பரிசு வழங்கினர். இரவு 7-30 மணியளவில் கழக ஆதரவாளர் நெல்லை மாவட்டப் புகழ் இ. அருணசலம் காளியப்பா குழுவினரின் மேளக்கச்சேரியோடு பொதுக்கூட்டம் ஆரம்பமாயிற்று. தோழர் அ. பழனியப்பன் கழகக் கொடியை ஏற்றி வைத்தும், மு. பொற்செழியன் அனைவரையும் வரவேற்றும் பேசினர். தலைவர் கௌதை மா. சிவனர் உரைக்குப்பின் தோழர்கள் கலைஞர் என். பி எம். அப்துல்காதர், நெல்லை சாமி, மு. பொற்செழியன், மு. க. சுப்பையா, சு. அ. துரை முதலியோர் விரிவுரையாற்றினர்.

### மணிப்புரம்

முத்தமிழ் மன்றத்தின் சார்பில் பொங்கல் விழாக் கூட்டம் 14-1-55-ல் பிரான்குளம் தோழர் வே. ஆ. சுப்பையா தலைமையில் நடைபெற்றது. செயலாளர் சு. தியாகராசன் தலைவரை வரவேற்றுப் பேசினர். பின்னர் மாஜி கவுன்சிலர் சே. முனியாண்டி, ஆசிரியர் க சேவியர், க. மு. பரமானந்தம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள், 'நண்பன்' என்ற நாடகம் நடிக்கப்பட்டதுடன் கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேறின.

நெல்லை நகரத்திற்கும் மணிப்புரத்திற்கும் நடைபாதை ஏற்படுத்துவதை வருகிற பட்ஜெட்டில் முடித்துத் தருவதாக ஒருமனப்பட்டிருக்கும் நகர மன்றத்தாரை இம்மன்றம் பாராட்டுவதுடன் உடனடியாக செயல்முறையிலும் முடித்துத் தரும்படி வேண்டிக் கொள்கிறது.

எமது மன்றத்தின் கிளை ஒன்று பம்பாயில் ஆரம்பிக்கப்பட்டு செவ்வன நடைபெறுவது குறித்து தலைமை நிலையம் மன்றத்தாரை மனமார பாராட்டுகிறது.

தமிழக காங்கிரஸ் தலைவராக ஆதிதிராவிடராகியக்கன் அவர்களை தேர்ந்தெடுத்ததைமனமாரவரவேற்பதுடன் அதற்காவன செய்த காமராஜரையும் சம்பந்தப்பட்டவர்களையும் பாராட்டுவதுடன் காமராஜ—கக்கன் காலத்திலேயே 'ஜாதிவெறிக்கு' இயன்றளவு முற்றுப்புள்ளி வைக்கும்படி பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறது.

தாழ்ந்தோருக்காக வெகு காலம் உழைத்து வந்த வடஆர்காடு தோழர் ஜே ஜே. தாஸ், மறைவு குறித்து அன்னரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

### திட்டக்குடி

16-1-55 அன்று திட்டக்குடியில் திராவிடர் திருநாள் தி. மு. க., தி. மா. மு. க. ஆகியவைகள் சார்பில் கொண்டாடப்பட்டது. விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்கட்கு அன்று மாலை 6 மணிக்கு திரு. கே. ராசமாணிக்கம் தலைமையில் பொ. வைத்தியநாதன் அவர்களால் கைத்தறி ஆடைகள் பரிசளிக்கப்பட்டது (சுமார் 40 ரூபாய் பெருமானமுள்ளது; இந்த விளையாட்டின் நினைவாக தி. மு. க. போராட்டங்களில் உயிர் நீத்தவர்கள் குடும்பத்திற்கு ரூ. 5 அனுப்பப்பட்டது.

### திருவொற்றியூர்

திராவிடத் திருநாளை முன்னிட்டு ஜனவரி 10, 12 ஆகிய இருநாட்களிலும் திருவொற்றியூரில் கைத்தறி ஆடைகள் (தோழர் நமசிவாயம் முதலீடு செய்யவும்) கழகத் தோழர்களால் ரூபாய் 227—7—6-க்கு விற்பனை செய்யப்பட்டது.

16-1-55 காலை திருவொற்றியூர் தி. மு. கழக இல்லத்தில் கவிஞர் கண்ணதாசன் முன்னிலையில் பொதுமக்களுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

### மதுரை

கொள்கைவீரன் குமாரவேல் நினைவாக மதுரையில் பணியாற்றிவரும் குமாரவேல் மன்றத்தினர் 9—1—55 ஞாயிற்றுக்கிழமை யன்று தோழர் மீ. சு. இளமுருகு பொற்செல்விக்கு வரவேற்பளித்தனர். வரவேற்புக்குப் பின் பல கருத்துரைகளை வழங்கினர்.

### வடுகபட்டி

திருக்குறள் மன்றப் பொதுக் கூட்டம் தோழர் கலைமன்னன் அவர்கள் தலைமையில் 12—1—55 புதன்கிழமை நடந்தது. தோழர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி 'திருக்குறளில் திருத்தமா!' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

### பெரியகுளம்

வடகரை இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் பத்தாவது ஆண்டு விழாவும் தமிழர் திருநாளும் 14—1—55 தோழர் அக்குல் தலைமையில் நடந்தது. தோழர் மீ. சு. இளமுருகுபொற்செல்வி "திருநாளேன்! எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

---

...க்கி நீர்கள்? இருவரும் ஆத்தி மாலையும், ...யும் சின்னமாகக் கொண்டுள்ளீர். ...ளும் நல்லவர்களே இருவரும் சோழன் ...யினில் பிறந்தவர்கள். இதிலே வெற்றி ...து, தோல்வி ஏது? யார் தோற்பினும் ...றப்பது நும்குடி அல்லவா, நண்பர்களே. ...ம் மறையாத களங்கத்தை சோழர் குடிக்கு உண்டாக்கி விட்டீர்களே, ...போரை விட்டொழிப்பீராக என ...ல நீரைத் தேக்கிய வண்ணம் புல...மான் கூறுகின்றார்.

...ன வெண்டோடு மிலைந்தோன் அல்லன்;
...ன வேம்பின் தெரியலோன் அல்லன்;
...ண்ணியும் ஆர்மிடைந்தன்றே; நின்னொடு
...வான் கண்ணியும் ஆர்மிடைந்தன்றே;
...தோற்பினும் தோற்பதுங் குடியே;
...வெறல் இயற்கையுமன்றே! அதனால்
...ரு என்று நும் செய்தி; கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே

...களத்திற்கு கலங்காத காவலர்கள் புலவர் கூற்றுக்கு கலங்குகின்றார்கள். புலவரைப் பணிகின்றார்கள்; ஐயனே எமது விழிகளைத் திறந்த ஐயனே, கடமையை மறந்து, மனமாச்சரியங் கொண்டு ...த்தில் புகுந்து எங்களை தடுத்தாட் கொண்ட வள்ளலே, குற்றத்தை உணர்ந்தோம் பிழைபொறுத்தருள்வீர். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பழந்தமிழ் பண்பை மறவோம் என பணிந்தனர். புலவர் களிப்புற்று இருவரையும் வாயார வாழ்த்துகின்றார்.

இந்தக் காட்சியை அல்லவா சுத்தானந்தர் கூறியிருக்க வேண்டும், அல்லது தமிழ் மூதாட்டி ஔவை, அதியமானுக்கும் ...மானுக்கும் நிகழவிரு... போரைத்...

தடுக்க சமாதான யாத்திரை ... வரலாற்றை யல்லவா ... டும். சுத்தானந்த... பின் ஏன் வ... பாதையை... வேண்டு...

தமிழ்ப்பட உலகில், கருத்துக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதோ என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது. நூற்றுக்கு 90 படங்கள் ஒரு கருத்தையே தழுவியும், சிறிது மாறுதலுடனும் வெளிவருகின்றன. இதனால் படத்தைப் பார்க்கும் மக்கள் ஏமாற்றத்திற்கு ஆளாவது மட்டுமல்லாமல், தமிழ்ப் படங்களின் மூலம் நல்லதோர் கருத்தை நாட்டில் பரப்ப முடியாமலும் போகலாம்.

இக்குற்றத்திற்கு முக்கிய காரணம் படமுதலாளிகளேயாகும். இவ்வித "போட்டி" மனப்பான்மை தமிழ்ப்பட தயாரிப்பாளர்களின் எண்ணத்திலிருந்து அறவே விலக வேண்டும்.

•

**காவேரி:**—இப்படத்தைத் தயாரிக்க கிருஷ்ணு பிக்சர்லார் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியும், அதற்கு செலவிட்ட காலம் முதலிய அனைத்தும் அபாரமாயிருந்திருக்கலாம், எனினும் இப்படத்தில் உள்ள கருத்துகளில், காட்சிகளில் சில இதற்குமுன் வெளிவந்த படங்களில் இடம் பெற்றுள்ளன. 'காவேரி' உருவாகும்போதே அந்த அம்சங்களை மற்ற படத் தயாரிப்பாளர்கள் கையாண்டனரா, அல்லது காவேரி படத்தில் மற்ற படங்களிலுள்ள அம்சங்கள் புகுத்தப்பட்டுள்ளதா என்ற ஐயப்பாட்டிற்கு இடமேற்படுகிறது. எனினும் இப் படத்தின் வசனம் அக்குறையைப் பெரும்பாலும் மறக்கச் செய்வது பாராட்டத் தக்கதாகும்.

•

மதவாதி ஞானனந்தரின் கைப்பாவையாகிவிட்ட மங்களபுரி அரசனின் ஆட்சியை வெறுத்து மக்கள் சீறியெழுகின்றனர். மக்களின் எழுச்சிக்கு சாதகமாக மன்னன் மைந்தன் (இளவரசன்) ஆதரவு தந்து ஊக்குவிக்கிறன் புதுமைப்பிரியன் என்ற மாற்றுருவில். இளவரசன்தான் புதுமைப் பிரியன் என்பது எவருக்கும் தெரியாது. இந்த சமயத்தில் உணவு விடுதி நடத்தும் நெல்லையப்பரின் மகள் காவேரியைச் சந்திக்கிறன். அந்த சந்திப்பு காதலாக வளர்கிறது மங்களபுரி ஆட்சியின் அலங்கோலத்தால் பேரரசனுக்கு வழக்கப்படி செலுத்த வேண்டிய கப்பம் கணங்கி விடுகிறது. அதற்கு தவணை பெற இளவரசன் விஜயனை அனுப்பி வைக்கிறன் மங்களபுரி மன்னன். சென்ற இடத்திலே வெற்றிவேந்தன் மகள் அமுதாவின் உதவியால் முழு கப்பத்தையும் கட்டிவிட்டு நாடு திரும்புகிறன். இளவரசனின் நினைவால் அமுதா வாடுவது அறிந்த வெற்றி வேந்தன் இளவரசனை மணமுடிக்க செங்கனலை தூது அனுப்புகிறன்.




## 'காவேரி'

•

கிருஷ்ணு பிக்சர்ஸ் வெளியீடு

•

தூதுவந்த செங்கனல் சந்தர்ப்ப வசத்தால் காவேரியைச்சந்தித்து அவளை அடைய முயற்சிக்கிறன். அதற்காக சூழ்ச்சிகளை கையாளுகிறன். அதன் விளைவு இளவரசனின் மூளை பாதிக்கப்படுகிறது. காவேரி பெருந்தொல்லைக்கு ஆளாகிருள் — அமுதா விஷமுண்டு சாகிருள். உண்மை உணர்ந்த வெற்றி வேந்தன் செங்கனலை தண்டிக்க முடிவு செய்கிறன். ஆனல் அவனதுபோக்கு அவனது உயிரையே குடித்து விடுகிறது. விஷமுண்ட அமுதா உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் வேளையில் காவேரியையும் விஜயனையும் ஒன்று சேர்க்கிருள். இவர்கள் நல்வாழ்வுக்கு பெரிதும் பாடுபடுகின்றனர் மணிமொழியும் தங்கமும். இதுதான் காவேரியின் கதைச் சுருக்கம்.

•

நடிப்பு:

சிவாஜி கணேசன், லலிதா, பத்மினி பி. எஸ். வீரப்பா, ஆர். பாலசுப்ரமண்யம், எம், என், நம்பியார் ஆகியோர் ஒருவரையொருவர் போட்டியிடும் வகையில் நடித்துள்ளனர். என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் நடிக்கும் நகைச்சுவைக் கட்டம் இப்படத்தில் குறிப்பிடத் தக்கதாகும். நடனங்களும் கச்சிதமாக அமைந்துள்ளன.

**தோழர் ஏ. எஸ். ஏ சாமி** அவர்கள் விறுவிறுப்பாகவும் கருத்து நிறைந்ததாகவும் தீட்டியுள்ள வசனம் இப்படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமென்பது ரசிகர்களின் ஒருமித்த எண்ணமாகும்.

**உடுமலை நாராயண கவியின்** பாடல்கள் ரசிகர்களை மகிழ்விக்கச் செய்கிறது. 'சந்தோஷங் கொள்ளாமே' 'காவேரித் தண்ணீர் பட்டால்' முதலிய பாடல்கள் மறக்க முடியாதவை.

**டைரக்டர் யோகானந்தம்** இப்படத்தின் வெற்றிக்காக பெரும் முயற்சி எடுத்துள்ளார். எனினும் அவர் முழு வெற்றி பெற முடியவில்லை.

கனவு காணுதல், காவேரியுடன் காதல் ஆகிய காட்சிகள் பலே ஜோர்! மற்றும் உடை, ஒளி, ஒலி, இசை அமைப்பு முதலிய அனைத்தும் சிறப்பாய் அமைந்துள்ளன.


காவேரி—இன்னும் பிரமாத வெற்றியை அடைந்திருக்க வேண்டிய படம். நாம் துவக்கத்திலேயே எடுத்துக் காட்டியுள்ள காரணங்களால் முழு வெற்றி கிட்டவில்லை. எனினும் ரசிகர்களுக்கு கூடுமானவரை களிப்பையும் கருத்தையும் அளிக்கிறது காவேரி.

—நக்கீரன்

## நடிகவேள் ராதாவின் முழக்கம்

திராவிட முன்னேற்றக் கழகம் ... வண்ணாரப்பேட்டை ... கிளை

நடிகவேள் எம். ஆர். ராதா தமது குழுவினருடன் நடத்திவந்த ராமாயண நாடகத்தை, சில வைதீகர்களின் கட்டுப்பாட்டுக்குக் குனிந்து கொடுக்கும் வகையில் நடத்தவொட்டாமல் 144 தடை உத்திர வைப்போட்டுவரும் அரசியலார் தங்களின் போக்கினை மாற்றிக் கொள்ளாவிடில் விரைவில் தடை உத்திரவை மீறி ராமாயண நாடகத்தை நடத்தியே தீருவேன் என்று எம். ஆர். ராதா அறிவித்துள்ளார்.



## காங்கிரஸ் பொருட்காட்சியில் "தூக்கு மேடை!" நாடகம்

11-1-55 பாளையங்கோட்டை காங்கிரஸ் பொருட் காட்சியில் எம். ஆர். ராதா அவர்களின் 'தூக்கு மேடை' நாடகம் நடைபெற்றது. பல காங்கிரஸ் பிரமுகர்கள் பார்த்து ரசித்தார்கள். பாளையங்கோட்டை நகர சபைத் தலைவர் (காங்கிரஸ்) நடிகவேள் ராதா அவர்களை பாராட்டி மலர் மாலைகள் சூட்டினர். 5 வருடங்களாக அரசாங்கம் தடை செய்திருந்த தூக்குமேடை நாடகம், வெகு விமரிசையாக காங்கிரஸ் எக்ஸிபிஷனில் நடைபெற்றது. ஆயிரக் கணக்கான ஆண்களும், பெண்களும் இடமின்றி நின்றுகொண்டே நாடகத்தை கண்ணுற்றனர்.




## தென்னுட்டுச் சிங்கம்

சிலம்பின் செல்வன் தீட்டியுள்ள இந்நூலில் கட்டபொம்மனின் வீரத்தையும்தென்னுட்டின் உயர் பண்பினையும் எவருக்கும் அடிபணியாத தன்மான வாழ்வினையும் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. நாடக முறையில் உருவாக்கப்பட்ட இக்கருத்தோவியம் திராவிடத்தின் சிறப்புகளில் ஒன்றுகத் திகழுகிறது எனக்கூறின் மிகையாகாது.

கிடைக்குமிடம்: இளங்கோ பதிப்பகம், கோவை, விலை ரூ. 1—8—0

## திராவிட வாசல்

வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுதலையடையப் போகும் நம் திராவிடம் எப்படியிருக்கும் எவ்விதம் இயங்கும் என்பதை இந்நூலில் சித்தரிக்கிருர் இதன் ஆசிரியர் கோ. இறைமுடிமணி. விறுவிறுப்பான நடையில் கருத்து மணம் கமழும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது.

கிடைக்குமிடம்:—தளபதி பதிப்பகம் சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. விலை அணு 4.

## தி.மு.க. புரட்சிப் பாடல்கள்

தி. மு. கழகக் கொள்கையினை விள[illegible] எளிய நடையில், ஏற்ற இசையில் கட[illegible] எஸ். மோகன் அவர்களால் இயற்ற[illegible]டுள்ள சிறந்த பாடல்கள். கலைஞர் [illegible] நிதியும், தோழர் ஈ. வி. கே. சம்பத்[illegible] களும் முன்னுரை வழங்கியுள்ளனர்.

கிடைக்குமிடம்: சாந்தா பதி[illegible] 38-F ஸ்ரீட், சிலாட்டர் அவுஸ் ரோ[illegible] களூர்-1. விலை 3 அணு.

[illegible] நடராசன் சோழ [illegible] ஊரல் மில் தெருவு, சென்னை-1.